வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu
ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 04 25.09.2023 திங்கட்கிழமை இதழ் : 289 பக்கங்கள் : 12

# இலங்கை விவகாரத்தில் வலுவான அழுத்தம் பிரயோகிப்பதற்கு பிரிட்டன் உதவ வேண்டும்!

## தொழில்கட்சி எம். பிகளை கோரினார் கஜேந்திரகுமார்

லண்டன், செப்ரெம்பர் 25

**ஐ. நா மனித உரிமைகள் ஆணையாளரின் எழுத்துமூல அறிக்கை தமக்கு ஏமாற்றம் அளித்திருக்கும் நிலையில் இணை அனுசரணை நாடுகளுக்கு தலைமை தாங்கும் பிரிட்டன் இலங்கை விவகாரத்தில் அக்கறை காண்பிக்கவேண்டும். வலுவாக அழுத்தம் பிரயோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.**

- இவ்வாறு பிரிட்டனின் தொழில்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வலியுறுத்தினார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

பிரிட்டன் சென்றுள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அந்நாட்டு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தொழில்கட்சி உறுப்பினர்களும் இலங்கை தமிழர்களுக்கான தீர்வு விவகாரத்தில் முனைப்புடன் செயலாற்றி வருபவருமான எட் டேவி, சியோபைன் மெக்டொனாக் மற்றும் பெரி கார்ட்டினர் ஆகியோரை சந்தித்துப் பேசினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரால்



வெளியிடப்பட்டுள்ள அறிக்கை தமக்கு ஏமாற்றமளிக்கும் வகையில் அமைந்துள்ளது. கடந்தகால அறிக்கைகளுடன் ஒப்பிடுகையில் இந்த 11

## பால் புரைக்கேறி குழந்தை மரணம்

யாழ்ப்பாணம், செப். 25

பால் புரைக்கேறியதில் மூன்று மாத ஆண் குழந்தை நேற்று ஞாயிற்றுக் கிழமை உயிரிழந்தது.

வட்டுக்கோட்டையை சேர்ந்த கிருஷ்ணகுமார் ஹரிகரன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.

சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

நேற்று காலை, குழந்தையின் தாய் குழந்தைக்கு பாலூட்டியுள்ளார். அப்போது, குழந்தை அசைவற்று காணப்பட்டது. இதையடுத்து பெற்றோர் குழந்தையை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். குழந்தையைப் பரிசோதித்த மருத்துவர்கள் அது ஏற்கனவே இறந்து விட்டதாகத் தெரிவித்தனர்.

மரண விசாரணைகளை 11

### எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து

## இடைக்கால இழப்பீடாக ரூ.28 கோடி கிடைத்தது!

கொழும்பு, செப். 25

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்துக்கான இடைக்கால இழப்பீட்டு தொகை நாட்டுக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, 8 இலட்சத்து 78 ஆயிரத்து 11

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

## ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கு ஆவணங்கள் அனுப்பினார் மௌலானா!

கொழும்பு, செப். 25

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த தகவல்கள் அடங்கிய ஆவணத்தை ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு ஆசாத் மௌலானா அனுப்பி வைத்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

இதேநேரம், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஆசாத் மௌலானாவின் தகவல்கள் அடங்கிய சனல் -4 ஆவணப் படத்தின் விடயங்களை 11



## யாழ்ப்பாணத்தில் பிறந்தவர் கனடா மாகாண அமைச்சரானார்!

ஒன்ராறியோ, செப். 25

யாழ்ப்பாணத்தில் பிறந்து போர் காரணமாக தனது 14ஆவது வயதில் கனடாவுக்கு புலம்பெயர்ந்த விஜய் தணிகாசலம் ஒன்ராறியோ மாகாணத்தின் போக்குவரத்து துறை இணை அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

முன்னதாக விஜய் தணிகாசலம் ஒன்ராறியோ மாகாண சபையில் உறுப்பினராக பதவி வகித்தார். இவர், பிப்மித் சிங் சர்க்காரியாவுடன் இணைந்து அமைச்சு பதவியை வகிக்கவுள்ளார்.

விஜய் யாழ்ப்பாணம் - வடமராட்சி - வல்வெட்டித்துறையை சேர்ந்தவர். ஒன்ராறியோ மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்ட முதல் கனடிய தமிழர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கிணற்றிலிருந்து சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், செப். 25

தோட்டக் கிணறு ஒன்றிலிருந்து குடும்பஸ்தர் ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை சடலமாக மீட்கப்பட்டார்.

ஏழாலை - மயிலங்காட்டில் உள்ள தோட்டக் கிணற்றில் இருந்தே இவ்வாறு சடலம் மீட்கப்பட்டது. இதில், அதே இடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் 11

## மக்கள் குரலையும் எதிர்க்கட்சியையும் அடக்கும் நோக்கில் புதிய சட்டங்கள்!

### எதிர்க்கட்சித் தலைவர் சாடல்

கொழும்பு, செப். 25

சமூக ஊடகங்கள் மற்றும் டிஜிற்றல் ஊடகங்களை கட்டுப்படுத்தும் நோக்கில் ஒடுக்குமுறை சட்டத்தை அரசாங்கம் சமர்ப்பிக்க தயாராகி வருகிறது. நிகழ்நிலை காப்பு என்ற பெயரை முன்னிலைப்படுத்திக் கொண்டாலும் அதில் எந்தப் பாதுகாப்பும் இல்லை என்றும் அதில் அடக்குமுறைகளே இருப்பதாகவும் பொது மக்களின் குரல்களையும் எதிர்க்கட்சியை அடக்குவதுமே இதன் நோக்கம் எனவும் எதிர்க் கட்சி தலைவர் தெரிவித்தார்.

இதற்கென ஆணைக்



குழு நியமிக்கப்படவுள்ளது. அதன் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதும் நீக்கப்படுவதும் 11

## நால்வர் குடும்பத்துக்கு ரூ.47 இலட்சம் கடன் சுமை

கொழும்பு, செப். 25

நாட்டில் நான்கு பேர் கொண்ட ஒவ்வொரு குடும்பமும் 47 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாய் கடனாளியாகியுள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர்களான வசந்த அத்துகோரள மற்றும் ஓ. ஜி. தயாரத்ன பண்டா ஆகியோர் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

அரசாங்கம் பெற்றுள்ள வரம்பற்ற 11

## நிபா வைரஸ் நாட்டில் நுழைந்திருக்கலாம்!

### சுகாதார பரிசோதகர் சங்கம்

கொழும்பு, செப். 25

பல நாடுகளில் பரவி வரும் நிபா வைரஸ் நாட்டுக்கள் நுழைவதைத் தடுக்க துறைமுகத்திலோ அல்லது விமான நிலையத்திலோ பாதுகாப்பு அமைப்பு ஏற்படுத்தப்படவில்லை. எனவே, இந்த வைரஸ் தெரிந்தோ தெரியாமல் நாட்டுக்குள் தற்போது நுழைந்திருக்கலாம் என பொது சுகாதார பரிசோதகர்கள் 11

# இப்படியும் நடக்கிறது

இறுதி யுத்தத்தில் நடந்த படுகொலைகள், யுத்தக் குற்றங்கள் குறித்து நாங்கள் சர்வதேச விசாரணை வேண்டும் என்று கேட்டபோது ஒட்டுமொத்த நாடும் அதற்கு எதிராகத் திரண்டிருந்தது.

ஒட்டுமொத்த நாடும் என்று நாங்கள் இங்கே சொல்ல வருவது, இந்த நாட்டிலுள்ள பெரும்பான்மையின அரசியல் தலைவர்கள் பற்றியது. அனைத்து சிங்கள அரசியல் தலைவர்களும் சர்வதேச விசாரணை என்பது அரசியலமைப்புக்கு முரணானது என்றும் அதனை அனுமதிக்க முடியாது எனவும் கூறிக்கொண்டிருந்தார்கள்.

ஆனால், இப்போது அவர்களே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து சர்வதேச விசாரணை வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றனர்.

அது என்ன நாங்கள் சர்வதேச விசாரணை கோரியபோது அதற்கு அரசியலமைப்பில் இடமில்லை என்ற நீங்களே இப்போது சர்வதேச விசாரணை கோருகின்றீர்கள் என்று நமது தரப்பிலிருந்து இப்போது விடுக்கப்படுகின்ற விமர்சனம் நியாயமானதுதான்.

ஆனால், இப்படியொரு விமர்சனத்தை நாம் முன்வைக்கின்றபோது, அவர்கள் தற்போது கேட்கின்ற சர்வதேச விசாரணையையும் எதிர்காலத்தில் கோராமல் விடவும் கூடும். ஆனால், அவர்கள் கோருகின்ற சர்வதேச விசாரணை என்பது தாக்குதல் நடத்தியவர்கள் யார், அவர்களை இயக்கியவர்கள் யார் என்பதைக் கண்டறிவதற்கான விசாரணை. சொல்லப் போனால் அது சர்வதேச உதவியின்றி செய்யவும் முடியாத ஒன்று. ஏனெனில், அந்த தாக்குதலுக்கு சர்வதேச பயங்கரவாத இயக்கம் ஒன்று உரிமை கோரியிருந்தது. தாக்குதல் நடத்தியவர்கள் தங்களை அந்த இயக்கத்தின் ஆதரவாளர்களாக அல்லது அந்த இயக்கத்தின் இலட்சியங்களை தொடர்பவர்களாக அறிவித்திருந்த காணொலி பதிவும் பொதுவெளியில் இருக்கின்றது.

இப்போது சனல் 4 வெளியிட்ட ஆவணப்படம், இந்த தாக்குதலை- உயிர்த்த ஞாயிறு அன்று நடத்தியது கோட்டாபயவை தேர்தலில் வெற்றிபெற செய்வதற்காக என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆக, கோட்டாபயவுக்கும் முஸ்லிம் பயங்கரவாத இயக்கத்துக்கும் என்ன தொடர்பு இருக்கின்றது? அப்படி தொடர்பு இல்லை என்றால் எதற்காக அந்த ஐ. எஸ். ஐ. எஸ். இயக்கம் இந்தத் தாக்குதலுக்கு உரிமை கோரியது என்பது போன்ற விடயங்களை நாம் விரும்பினாலும் அதாவது இந்த நாடு விரும்பினாலும் தனியாக செய்ய முடியாது. அதாவது இந்தத் தாக்குதல் பற்றியும் அதன் பின்னணி பற்றியும் அசாத் மௌலானா தெரிவித்த விடயங்களை விசாரணை செய்வதற்கு சர்வதேச விசாரணை கோரப்படுகின்றதே தவிர, சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இதனை விசாரிக்க வேண்டும் என்று இதுவரை யாரும் கோரியதாக தெரியவில்லை.

தமிழ் மக்கள் இறுதி யுத்தத்தில் நடந்த கொடுமைகளை - இனப்படுகொலை பற்றிய விசாரணை கோருவதற்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சர்வதேச விசாரணை கோருவதற்கும் அடிப்படையில் உள்ள வேறுபாட்டை நமது சட்ட மேதைகள் உணர்ந்ததாக தெரியவில்லை.

அதுவல்ல இன்று நமக்கு உறுத்துகின்ற விடயம். சனல் 4 இந்த விடயத்தை பேசுபொருள் ஆக்கியதிலிருந்து அந்த விடயமே நாட்டில் பேசு பொருளாகியிருந்தது. இனி அது எத்தனை மாதங்களுக்கு கொண்டுசெல்லப்படும் என்பது தெரியவில்லை. ஆனால், அந்த விடயம் பேசுபொருளானதிலிருந்து நாட்டின் கவனம் அதில் மட்டுமே இருக்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோ, நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்க தன்னால் என்னென்ன எல்லாம் செய்யமுடியுமோ அதனை எல்லாம் செய்துகொண்டு போய்க் கொண்டே இருக்கின்றார்.

அடுத்த மாத இறுதியில் சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த கட்ட கடன் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஜனாதிபதியின் நிதி விவகார ஆலோசகரும் நிதி அமைச்சின் முன்னாள் செயலாளருமான கலாநிதி சமரதுங்கவுக்கு நெருங்கிய வட்டாரங்களோ, பெரும்பாலும் அடுத்த மாதமே நாடு மீண்டு எழுந்துவிடும் என்று அவர் நம்பிக்கை கொண்டிருப்பதாக தெரிவித்தது.

பல வருடகால யுத்தத்திலிருந்து நாட்டை மீட்டெடுத்தவர் என்று சிங்கள மக்கள் மகிந்த ராஜபக்ஷவை இன்றும் யுத்த வெற்றி நாயகனாக கொண்டாடுவதுபோல பொருளாதார நெருக்கடியிலிருந்த நாட்டை- வங்குரோத்து அடைந்திருந்த நாட்டை - ரணில் விக்கிரமசிங்கவே மீட்டெடுத்தார் என்று நம்புகின்ற அல்லது கொண்டாடுகின்ற நிலமை ஒன்று நெருங்கி வருகின்றது என்று நம்பும் ஜனாதிபதி அதுவரை நாட்டை இதுபோன்ற வேறு பிரச்னைகளோடு கொண்டு செல்லவே விரும்புவார் என்பது தெரிந்ததே.

தாக்குதல் பற்றிய சர்வதேச விசாரணை என்பது ரணில் விக்கிரமசிங்கவை எந்த வகையிலும் பாதிக்கப்போவதில்லை. சனல் 4 சொல்வது தான் சரியானது என்று விசாரணைகளில் தெரியவந்தாலும் அதனால் ரணிலுக்கு எந்தப் பாதிப்பும் வரப்போவதில்லையே.!

- ஊர்க்குருவி.

# நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய அலங்கார திருவிழா ஆரம்பமானது!

வடமராட்சி, செப். 25

வரலாற்று சிறப்புமிக்க வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது.



சிவாச்சாரியார்கள் மந்திரம் ஓதி, ஓமம் வளர்த்து வசந்த மண்டப பூசைகளுடன் ஆரம்பமாகிய அலங்கார உற்சவம் நாகதம்பிரான் உள் வீதி சுற்றலுடன் பூசைகள் நிறைவு பெற்றன.

தொடர்ந்து 11 தினங்கள் இடம் பெறும் திருவிழாக்களில் சிறப்பு திருவிழாக்களாக. 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாம்பு திருவிழாவும், 30ஆம் திகதி சனிக்கிழமை கப்பல் திருவிழாவும், முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேட்டைத் திருவிழாவும், இரண்டாம் ஆம் திகதி திங்கட்கிழமை சப்பர திருவிழாவும், மூன்றாம் திகதி செவ்வாய்க்கிழமை சமுத்திர தீர்த்தமும், நான்காம் திகதி புதன் கிழமை பட்டுத் தீர்த்தமும் இடம்பெறவுள்ளன.

(ஐ-02)

# 82,870 கோடி ரூபாய் மக்களிடம் புழக்கத்தில்!

கொழும்பு, செப். 25

இலங்கை மத்திய வங்கி 2023 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் நாணயத் தாள்கள் மற்றும் நாணயங்கள் என 82 ஆயிரத்து 870 கோடி ரூபாய் எந்த வங்கிகளிலும் வைப்புச் செய்யப்படாது மக்களின் கைகளில் புழக்கத்தில் இருப்பதாக லங்கா பே நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி சன்ன டி சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை இலங்கை மத்திய வங்கி நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்கள் என ஆயிரத்து 11 ஆயிரத்து 10 கோடி ரூபாய் பணத்தை புழக்கத்தில் விட்டுள்ளது.

இதில் 28 ஆயிரத்து 140 கோடி ரூபாய் வங்கிகளிடம் உள்ளன. மீதமுள்ள 82 ஆயிரத்து 870 கோடி ரூபாய் பணம் பொருளாதாரத்துக்கு எவ்வித பயனுமின்றி பொதுமக்கள் மத்திய புழக்கத்தில் உள்ளது.

சிலர் வருமான வரி செலுத்துவதை தவிர்க்கவும் தமது வசதிக்காகவும் வேறு காரணங்களுக்காகவும் பணத்தை வங்கியில் வைப்பு செய்யவில்லை என்பதால், அந்த பணத்தினால், அவர்களுக்கு எந்த பிரதிபலன்களும் கிடைக்காது.

மேலும், வங்கிகளுக்கு பொது மக்களுக்கு கடன் வழங்கும் போது நிதி தட்டுப்பாடு ஏற்படும் எனவும் சன்ன டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

# கலைஞர்கள், ஊடகவியலாளர்களுக்கு சீனாவின் உதவித்திட்டத்தில் வீடுகள்!

## அமைச்சர் பிரசன்ன அறிவிப்பு



கொழும்பு, செப். 25

குறைந்த வருமானம் பெறுபவர்கள் மற்றும் படைப்பாற்றல் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்காக சீன அரசாங்கத்தின் உதவியுடன் கட்டப்படும் 1996 வீட்டு அலகுகள் குறித்த ஒப்பந்தம் அடுத்த மாதம் கைச்சாத்திடப்படும் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்தது.

அடுத்த மாதம் சீனாவின் பீஜிங்கில் நடைபெறும் பி. ஆர். ஐ. உச்சிமாநாட்டின் போது ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படும் என்று அமைச்சு தெரிவித்தது.

1996 வீட்டு அலகுகளில் இந்நாட்டின் படைப்பாற்றல் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு 108 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பழுதுறு வத்த பகுதியில் வீட்டுத் தொகுதி நிர்மாணிக்கப்பட வுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். இதன்படி குறைந்த வருமானம் பெறுவோருக்கு ஆயிரத்து 888 வீடுகள் ஒதுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த வீடமைப்புத் திட்டத்துக்காக சீன அரசாங்கம் இலங்கைக்கு 552 மில்லியன் யுவான் நிதியுதவியை வழங்கவுள்ளது.

இங்கு இத்திட்டத்துக்காக செலவிடப்படும் வரிப்பணம், காணி சுவீகரிப்புக்கான செலவு, காணி அபிவிருத்திக்கான செலவு, வடிவமைப்பு வேலைக்கான செலவு மற்றும் அடிப்படை விலைப்பட்டியல் தயாரிப்பதற்கான செலவு, கேள்வி கோரல் பணிக்கான செலவு மற்றும் கழிவுநீர் வசதிகளின் செலவு என்பன இலங்கை அரசால் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பான பரிமாற்றக் கடிதத்தில் சீன மக்கள் குடியரசும் இலங்கை அரசும் கடந்த ஜனவரி 9ஆம் திகதி கைச்சாத்திட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் குறைந்த வசதிகள் கொண்ட குடியிருப்புகளில் வசிப்பவர்களின் குடியேற்றப் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காணப்படும் - என்றும் அமைச்சர் கூறினார்.

(ஐ)

# 50 ரயில் என்ஜின்கள் பழுது; ரயில் சேவைகள் பாதிப்பு!

கொழும்பு, செப். 25

50 ரயில் என்ஜின்கள் பல்வேறு காரணங்களால் பழுதடைந்துள்ளன. இதனால், ரயில் சேவைக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தியா, ஜப்பான், சீனா, அமெரிக்கா மற்றும் கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட என்ஜின்கள் தொழில்நுட்பக் குறைபாடுகளால் பழுதடைந்துள்ளன என்று புகையிரதத் திணைக்கள போக்குவரத்து அத்தியட்சகர் எம். ஜே. இதிபொலகே தெரிவித்தார்.

நாளாந்தம் ரயில் போக்குவரத்துக்கு 75 என்ஜின்கள் தேவைப்படுகின்ற நிலையில், தற்போது 50 என்ஜின்களே உள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, தொழில்நுட்பக் கோளாறு காரணமாக 20 என்ஜின் இயந்திர தொகுதிகள் சேவையில் ஈடுபடவில்லை. நாளாந்த ரயில் சேவைக்கு 90 இயந்திர தொகுதிகள் தேவையான நிலையில் தற்போது 70 என்ஜின் இயந்திர தொகுதிகளே சேவையில் ஈடுபடுகின்றன என்றும் புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
25.09.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், புரட்டாதி 08

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# புதிய அணுகுமுறை தேவை

யுத்தத்துக்கு பின்னரான அரசியல் அணுகுமுறைகள் வெற்றியை தரவில்லை. தொடர்ந்தும் அடுத்தது என்ன - என்னும் கேள்வியுடன்தான் நாட்கள் நகர்கின்றன. அரசியல் கட்சிகள் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவரும் சூழலே காணப்படுகின்றது. போராட்டங்கள் என்னும் பெயரில் இடம்பெறும் சிறுகுழு எதிர்ப்பு நடவடிக்கைகளால் இதுவரையில் எதனையும் சாதிக்க முடியவில்லை. சிங்கள நகர்வுகளை தடுத்துநிறுத்த முடியவில்லை. அதேவேளை சர்வதேச அழுத்தங்கள் என்பவையும் எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை. இதற்கான அடிப்படை காரணம் என்ன?

தமிழர் பக்க நியாயத்துடன் எந்தவொரு நாடும் இல்லை. இதற்கான காரணம் என்னவாக இருக்க முடியும்? ஒன்றில் தமிழர்களின் நியாயங்கள் அவர்களின் நலன்களுக்கு முன்னால் பெறுமதியற்றவையாக இருக்கவேண்டும். அல்லது தமிழர்கள் நியாயமென்று நம்பிக் கொண்டிருப்பதை அவர்கள் நியாயமென்று ஏற்றுக்கொள்ளாமல் இருக்க வேண்டும். இது ஒன்றுதானே ஒரேயொரு காரணமாக இருக்க முடியும் - ஏனெனில், கடந்த பதினான்கு வருட கால அரசியல் நகர்வுகளின் மூலம் இலங்கை அரசு இந்தியாவிலிருந்தோ அல்லது மேற்குலகில் இருந்தோ கடுமையான நெருக்கடிகள் எதனையும் எதிர்கொள்ளவில்லை. ஒப்பீட்டடிப்படையில் சிறியளவான அழுத்தங்களையே எதிர்கொண்டு வருகின்றது. அதனை இலங்கை அரசாங்கத்தை பொறுத்தவரையில், அவ்வாறான அழுத்தங்களை மிகவும் இலகுவாக கையாள முடியுமென்றே நம்புகின்றது. இதன் காரணமாகத்தான் - அழுத்தங்கள் என்று தமிழர்கள் உச்சரிப்பவற்றால் தமிழர்களுக்கு எவ்வித நன்மையும் கிட்டவில்லை.

இந்தியா தொடர்ந்தும் 13ஆவது திருத்தச்சட்டத்தையே வலியுறுத்தி வருகின்றது. இந்தியாவிடமிருந்து அதற்கப்பால் எதனையும் எதிர்பார்க்க முடியாது. இது வெள்ளிடைமலை. மேற்குலக நாடுகள் என்னும் போது பிரதானமானது அமெரிக்காவாகும்.

அவர்களைப் பொறுத்தவரையில், உள்நாட்டுக்குள் கண்டடையக் கூடிய தீர்வொன்றையே வலியுறுத்துகின்றனர். அவர்களது இராஜதந்திர மொழி அதனையே நமக்கு உணர்த்துகின்றது. ஆனால், நாமோ ஒற்றையாட்சி நீக்கப்பட்ட அரசமைப்பு ஒன்றின் மூலம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்துகின்றோம்.

இதிலுள்ள நடைமுறை சிக்கல்களை பெரும்பாலான அரசியல் கட்சிகள் புரிந்து கொள்கின்றனர் - ஏனெனில், அவ்வாறானதோர் அரசியல் தீர்வை கடந்த 74 வருட கால அரசியல் நகர்வுகளின் மூலம் அடைய முடியவில்லை. தமிழர்களால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியிலேயே முடிந்திருக்கின்றன. ஆனால், இந்தத் தோல்விக் காலத்தில் தமிழர்கள் மேலும் பின்னுக்கே சென்றிருக்கின்றனர். அவர்களது நிலைமை தொடர்ந்தும் மோசமடைந்தே செல்கின்றது. இந்த நிலைமையை பெரும்பாலான அரசியல்வாதிகள் புரிந்து கொள்கின்றனர். ஆனால், தேர்தல் போட்டியின் காரணமாக தங்களின் புரிதலை மக்களுடன் பகிர்ந்துகொள்ளத் துணிவற்றவர்களாகவே இருக்கின்றனர். இது அடிப்படையில் மக்களுக்கு எதிரானது.

எனவே, பழைய அணுகுமுறைகளை இனியும் கைக்கொள்வது விழலுக்கு நீரிறைப்பதற்கு ஒப்பானது. ஒரே மாதிரியான அணுகுமுறைகளை கைக்கொள்வதனால் எதனையும் சாதிக்க முடியாது. தேவை புதிய அணுகுமுறைகளாகும். வெறும் எதிர்ப்பும் பயன்படாது - அதேவேளை முற்றிலும் சரணாகதியும் பயன்படாது. இரண்டுக்கும் இடைப்பட்ட அணுகுமுறையொன்றை கண்டடைய வேண்டும். இதற்காக நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும். அப்போதுதான் அவ்வாறானதோர் அணுகுமுறையை கண்டடைய முடியும்.

# அலி சப்ரி எம். பிக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை!

## இலஞ்ச, ஊழலுக்கு எதிரான அமைப்பு கேள்வி

*கொழும்பு, செப். 25*

*பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் சட்ட விரோதமான முறையில் தங்கத்தை கொண்டு வந்தமை தொடர்பில் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவில் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்துள்ளன. இருப்பினும், இந்த விடயம் தொடர்பில் இது வரையில் எந்தவித சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என இலஞ்ச, ஊழல், வீண் விரயத்துக்கு எதிரான பிரஜைகள் சக்தியின் தலைவர் ஜாமுனி காமந்த துஷார தெரிவித்தார்.*

*பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் சட்ட விரோதமான முறையில் தங்கத் தைக் கொண்டு வந்தமை தொடர்பில் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவில் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்தமை தொடர்பில் இலஞ்ச, ஊழல், வீண் விரயத்துக்கு எதிரான பிரஜைகள் சக்தி கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.*

*இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது,*

*சுங்க கட்டளைச் சட்டத்தின் 129ஆவது சரத்தின் படி ஏதேனும் குற்றவாளிக்கு 3 வருடங்கள் அபராதம் விதிக்க விசாரணை அதிகாரிக்கு அதிகாரம் உள்ளது. இந்த சட்டத்தின் 163ஆவது சரத்தின்படி அரசுடமையாக்குவது அல்லது தண்டனைக்குரிய குற்றமாக அடையாளம் காணப்படும் சந்தர்ப்பத்தில் அதனை தளர்த்துவதும் விசாரணை அதிகாரியிடம் உள்ளதாக சுங்கத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இந்த விடயங்களை கருத்தில் கொண்டு நோக்கும் போது முறைப்பாடுகள் தொடர்பில் தொடர்ந்தும் செயல்படாமல் இருக்க ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. இது திருடனின் தாயிடம் கேட்பதை போன்று சுங்கத்திணைக்களம் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் இது சரியா அல்லது தவறா? என்பது கேட்டு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணைகளை நிறைவு செய்கிறது.*

*இலஞ்ச ஊழல் ஆணைக்குழு புதிய சட்டமொன்றை கொண்டு வந்தது. திருடர்களை காப்பாற்றவா? இந்த சட்டங்கள் இருக்கின்றன - என்றும் கேட்டார். (ஐ)*

# கொழும்பு தேசிய மருத்துவமனையில் கைவரிசை காட்டிய நபர் சிக்கினார்!

*கொழும்பு, செப். 25*

*கொழும்பு தேசிய மருத்துவமனையில் வெளிநோயாளர் பிரிவு மற்றும் கிளினிக்குகளை உள்ளடக்கிய, சீன அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட புதிய அடுக்குமாடி கட்டடத்தில் பல்வேறு உபகரணங்களை திருடிய குற்றச்சாட்டில் தனியார் துப்புரவு நிறுவனம் ஒன்றின் பரிசோதகர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக மருத்துவமனையின் பாதுகாப்பு பிரிவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.*

*மருதானை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நபரை நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.*

*சி. சி. ரீ. வி. கமெராக்களில் பதிவான காட்சிகளின் அடிப்படையிலான விசாரணையின்போது உரிய நபரை அடையாளம் காண முடிந்ததாக மருத்துவமனையின் பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்தனர். (ஐ)*

## குப்பிழான் கிராமத்துக்கென இணையதளம் அங்குரார்ப்பணம்!

*யாழ்ப்பாணம், செப். 25*

*அண்மையில் மறைந்த பிரபல எழுத்தாளர் குப்பி ழான் ஐ. சண்முகன் நினைவாக குப்பிழான் கிராமத்துக்கென* Kuppilan.org *எனும் புதிய இணையத்தளம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.*

*குப்பிழான் கிராமத்தின் வாழ்வியல், பண்பாடு, கலை, கலாசாரம், வரலாறு, கட்டுரைகள், காணொலி கள், படங்கள், செய்திகள் எனப் பலவற்றையும் ஆவ ணப்படுத்தும் நோக்கில் இந்த இணையளத்தளம் கடந்த வியாழக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. (ஐ)*

## சு. கவின் செயலர் பதவியை கைப்பற்ற துமிந்த போட்டி!

*கொழும்பு, செப். 25*

*சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து தயாசிறி ஜயசேகர நீக்கப்பட்டதை தொடர்ந்து அந்தப் பதவியை கைப்பற்றுவதற்கு கடும் போட்டி இடம்பெற்று வருகின்றது. அதில், முன்னணியில் இருப்பவர் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் துமிந்த திஸநாயக்க.*

*துமிந்த பொதுச் செயலாளராக இருந்த போதுதான் கட்சிக்குள் அவருக்கு எதிராகப் பிரச்னை ஏற்பட்டு அவரிடம் இருந்து பதவி பறிக்கப்பட்டு அது தயாசிறிக்கு வழங்கப்பட்டது. இப்போது அந்தப் பதவியை மீண்டும் கைப்பற்றுவதற்குத் துமிந்த முயற்சி செய்து வருகிறார் என்று அறியமுடிகின்றது.*

*சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரியோடு துமிந்த நெருக்கமாக இருப்பதால் ஒருவேளை இது சாத்தியப்படலாம் என்கின்றது அந்தக் கட்சியின் வட்டாரம். (ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செப்ரெம்பர் - 25 திங்கட்கிழமை
சோபகிருது வருடம் - புரட்டாதி 08
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : ஏகாதசி




**மேடம்**

புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சாதிக்கும் நாள்.

**இடபம்**

சந்திராஷ்டமம் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்து கொண்டே இருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். வியாபாரத்தில் வசூலாவதில் தாமதம் ஏற்படும். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டும்.

**மிதுனம்**

பிள்ளைகளால் ம்கிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. வியாபாரம் தழைக்கும். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும். நன்மை கிட்டும் நாள்.

**கடகம்**

குடும்பத்தினருடன் மனம்விட்டு பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் அதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**சிம்மம்**

வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். கனவு நனவாகும் நாள்

**கன்னி**

திட்டவட்டமாக செயல்பட்டு காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**துலாம்**

உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். துணிச்சல் அதிகரிக்கும் நாள்.

**விருட்சிகம்**

கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். அழகும் இளமையும் கூடும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக்கொள்வீர்கள். மதிக்கப்படுவீர்கள். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**தனுசு**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலைகள் வந்து போகும். சக ஊழியர்களிடம் உயரதிகாரி பற்றி விமர்சிக்க வேண்டாம். கவனம் தேவைப்படும் நாள்.

**மகரம்**

அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். வியாபாரத்தில் பாக்கிகளை கறாராகப் பேசி வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் அதிருப்தி உண்டாகும். கடினமாக உழைக்க வேண்டிய நாள்.

**கும்பம்**

குடும்பத்தாரின் ஒத்துழைப்பு இருக்கும். சொத்து வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**மீனம்**

தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தில் புது முடிவுகள் எடுப்பீர்கள். பெரிய பொறுப்புகள் தேடிவரும். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

# அண்ணாமலையை பதவி நீக்க பா. ஜ. கட்சி தலைமை மறுப்பு!

## அ. தி. மு. க. தீவிர கலந்துரையாடல்

சென்னை, செப். 26

தமிழக பா. ஜ. க. தலைவர் பதவியில் இருந்து அண்ணாமலையை நீக்க டில்லியில் அ. தி. மு. க வலியுறுத்திய நிலையில், பா. ஜ. க. தலைமை அதை ஏற்க மறுத்துள்ளது. இந்நிலையில் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து மூத்த நிர்வாகிகள் பழனிசாமியுடன் ஆலோசனை நடத்தி வருகின்றனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை ஏற்கெனவே ஜெயலலிதா குறித்து கருத்து தெரிவித்திருந்த நிலையில பெரும் சர்ச்சையானது. இதைத் தொடர்ந்து கூட்டணியை முறித்துக் கொள்வதாக அ. தி. மு. க. அறிவித்தது.

இதனிடையே, கடந்த வாரம் டெல்லியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை அ. தி. மு. க. பொதுச்செயலாளர் பழனிசாமி சந்தித்தபோது, மக்களவைத் தேர்தல் தொகுதி பங்கீடு தொடர்பாக விவாதம் நடைபெற்றதாகவும், அதில் பா. ஜ. க. அதிக எண்ணிக்கையில் தொகுதிகளைக் கேட்டதாகவும், இதில் பழனிசாமி அதிருப்தி அடைந்தார் என்றும் கூறப்படுகிறது.

இந்த சந்திப்புக்குப் பிறகு, அண்ணாமலையின், அண்ணா குறித்த பேச்சைக் கண்டித்து, பா. ஜ. கவுடன் கூட்டணியில் இல்லை என முன்னாள் அமைச்சர் டி. ஜெயக்குமார் சில தினங்களுக்கு முன்பு அறிவித்தார். இதனால் இரு கட்சிகளிடையே சலசலப்பு நிலவுகிறது.

அண்ணாமலை, தான் தெரிவித்த கருத்து சரியானதுதான் எனக் கூறி வரும் நிலையில், அவருக்கு எதிராக அ. தி. மு. க. நிர்வாகிகள் போர்க்கொடி தூக்கியுள்ளனர். இந்நிலையில், அண்மையில் பா. ஜ. க. உயர்பீடத்துடன் நடந்த சந்திப்பில், அ. தி. மு. கவுக்கு எதிராக அண்ணாமலை தொடர்ந்து பேசி வருவது கூட்டணியை பாதிக்கும். மக்களவை தேர்தலை ஆரோக்கியமாக எதிர்கொள்ள முடியாது. அவரை பா. ஜ. க. மாநில தலைவர் பதவியில் இருந்து மாற்றினால்தான் தேசிய ஜனநாயக கூட்டணியில் அ. தி. மு. க. தொடர முடியும் என்று நிர்பந்தித்ததாகக் கூறப்படுகிறது.

இதை நட்டா ஏற்க மறுத்ததாகவும், கூட்டணி இல்லை என அறிவித்துவிட்டு பேச்சுக்கு வந்திருப்பது ஏற்புடையதாக இல்லை என்று அவர் தெரிவித்தாகவும் தகவல் வெளியாகியுள்ளது. தங்கள் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் தமிழகம் திரும்பியுள்ள அ. தி. மு. க. நிர்வாகிகள், டில்லி சந்திப்பு மற்றும் பா. ஜ. க. தலைமையின் நிலைப்பாடு குறித்து பழனிசாமியுடன் தொலைபேசி வாயிலாகத் தெரிவித்தாகவும், அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசித்து வருவதாகவும் தெரிகிறது. இதனால், அ. தி. மு. க. தலைமையிடமிருந்து கூட்டணி தொடர்பாக விரைவில் முக்கிய அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஐ)

# தமிழ் இலக்கியங்களை மொழி பெயர்க்க பல்கலைக்கழகங்கள் துணையாக நிற்கும்!

## தமிழக ஆளுநர் ரவி தெரிவிப்பு

சென்னை, செப். 25

தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்க்க பல்கலைக்கழகங்கள் துணையாக இருக்கும் என்று ஆளுநர் ஆர். என். ரவி கூறினார்.

சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் தமிழ் அறிஞர்களுடன் ஆளுநர் ரவி நேற்றுமுன்தினம் கலந்துரையாடினார். அப்போது அவர் பேசியவை வருமாறு,

மொழிதான் மக்களின் ஆன்மா. தமிழ் மொழி குறித்து நான் அறிந்தபோது, அது எவ்வளவு பெரிய பொக்கிஷம் என்பதை புரிந்துகொண்டேன். தமிழில் ஹஅறம்’ என்ற சொல்லுக்கு இணையான மொழிபெயர்ப்பை, எந்த ஐரோப்பிய மொழியிலும் நான் கண்டதில்லை. இந்திய அளவில் தமிழுக்கு இணையாக பழமையான மொழியாக சம்ஸ்கிருதம் மட்டுமே உள்ளது. இத்தகைய பழமையான மொழியின் இலக்கியங்களில் உலக’ என்ற வார்த்தை அதிக அளவில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

முக்கியத்துவம் வாய்ந்த கருத்துகள் கொண்ட தமிழ் மொழியின் சிறப்பை, உலகெங்கும் கொண்டு சேர்க்க வேண்டும். இந்தப்பணியை மொழிபெயர்ப்பாளர்கள் சிறப்பாக செய்து வருகின்றனர். அதேநேரம், மொழி பெயர்ப்புப் பணிகளை விரிவான முறையில் மேற்கொள்ள வேண்டும்.

தற்போது பல்வேறு மாநிலங்களில் உள்ளவர்களும் தமிழ் மொழியைக் கற்று வருகின்றனர். அவர்களுக்கான தேர்வு விடுமுறையின்போது தமிழகத்தை சுற்றிப்பார்த்து, இங்கிருக்கும் விஷயங்களை நேரில் அறிந்து கொள்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன.

இலக்கிய மொழிபெயர்ப்பு பணிகளுக்கு பல்கலைக்கழகங்கள் உறுதுணையாக இருக்கும். மொழிபெயர்ப்பாளர்களை ஊக்கப்படுத்தி, இலக்கியங்களை உலக அளவில் கொண்டு சேர்ப்போம் - என்றார்.

முன்னதாக, திருமுறைகளை மொழிபெயர்த்தவர்களை ஆளுநர் ஆர்.என்.ரவி கௌரவித்தார். நிகழ்வில், தேவாரம் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மறவன்புலவு சச்சிதானந்தன், மயிலை திருவள்ளுவர் தமிழ்ச் சங்கச் செயலர் சேயோன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். (ஐ)

# தி. மு. கவின் ஆட்சியில் 40 அணைகள் கட்டப்பட்டன!

## அமைச்சர் துரைமுருகன்

சென்னை, செப். 25

தி. மு. க. ஆட்சியில் 40 அணைகள் கட்டப்பட்டுள்ளன என்று தி. மு. க. பொதுச்செயலாளரும் தமிழக நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், “உண்மைக்கு மாறான செய்திகளைப் பேசி வம்பில் மாட்டிக் கொள்வதை அண்ணாமலை வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறார். அதில் ஒன்றுதான் இது. காமராஜர், கிருஷ்ணகிரி அணை, சாத்தனூர் அணை, வைகை அணை, மணிமுத்தாறு அணை போன்ற அணைகளை கட்டினார் என்பதில் மாறுபட்ட கருத்தில்லை. ஆனால், திமுக ஆட்சியில் 5 அணைகளை மட்டுமே கட்டினார்கள் என்று அண்ணாமலை சொல்வது வடிகட்டிய பொய்.

நம்பியாறு அணை, பொய்கையாறு அணை, கொடுமுடியாறு அணை, கடானா அணை, ராமநதி அணை, பாலாறு அணை, பொருந்தலாறு அணை, மருதாநதி அணை,பரப்பலாறு அணை, வடக்கு பச்சையாறு அணை, பிளவுக்கல் அணை, மோர்தானா அணை, அடவிநயினார் அணை, ராஜாதோப்பு அணை, ஆண்டியப்பனூர் ஓடை அணை, சாஸ்தா கோயில் அணை, குப்பநத்தம் அணை, இருக்கன்குடி அணை, செண்பகத்தோப்பு அணை, நங்காஞ்சியார் அணை என 40-க்கும் மேற்பட்ட அணைகளை கட்டியது மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி தலைமையிலான தி. மு. க. ஆட்சி.

ஆளுங்கட்சியின் மீது எதிர்க்கட்சி குற்றம் குறைகளைச் சொல்வது தவறில்லை. ஆனால், சொல்கிற குற்றச்சாட்டு உண்மையா என்பதை ஒருமுறை பரிசீலனை செய்து பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், அவர் கூறும் குற்றச்சாட்டு யாவும் புஸ்வாணமாகிவிடும் - என்றார். (ஐ)

### யாழிலிருந்து சென்ற பஸ்

# ஓட்டோவை மோதியதில் இரண்டு பேர் உயிரிழப்பு!

கொழும்பு, செப். 25

**யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற பேருந்து முச்சக்கர வண்டியை மோதியதில் இருவர் உயிரிழந்தனர். மூவர் படுகாயமடைந்தனர்.**

குருநாகல் - தம்புள்ளை பிரதான வீதியின் கலேவெல - பெலிகமுவை பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து எம்பிலிபிட்டி நோக்கி பயணித்த தனியார் பேருந்தும் ஆராச்சிக்கட்டுவை பகுதியில் இருந்து தம்புள்ளை நோக்கி பயணித்த முச்சக்கரவண்டி ஒன்றுமே மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளன.

விபத்தில் காயமடைந்த முச்சக்கரவண்டியில் சென்றவர்கள் ஆராச்சிக்கட்டுவையை சேர்ந்த குழுவினர் என ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளதாக கலேவெல பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# நாடு திரும்பினார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, செப். 25

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியுள்ளார்.

டுபாயில் இருந்து வந்த எமிரேட்ஸ் விமான நிறுவனத்துக்கு சொந்தமான இ. கே. 650 விமானம் மூலம் நேற்று காலை 8.30 மணியளவில் அவர் நாடு திரும்பினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜி 77 மற்றும் சீன அரச தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்காக கடந்த 13ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கியூபாவின் ஹவானாவுக்கு பயணமானார். கியூப பயணத்தை நிறைவு செய்த பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் வருடாந்த அமர்வில் கலந்துகொள்வதற்காக கடந்த 17 ஆம் திகதி அமெரிக்காவின் நியூயோர்க் நகரை சென்றடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தியாகி திலீபன் நினைவிடத்தில் சந்தோஷ் நாராயணன் அஞ்சலி!



கொழும்பு, செப். 25

தியாக தீபம் திலீபன் நினைவிடத்தில் தென்னிந்திய இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் நேற்று அஞ்சலி செலுத்தினார்.

யாழ்ப்பாணம் வந்துள்ள தென்னிந்திய இசையமைப்பாளர் சந்தோஷ் நாரயணன் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். இதன்போதே, தியாகி திலீபனின் நினைவிடத்துக்கு சென்று அவர் அஞ்சலி செலுத்தினார்.

சந்தோஷ் நாராயணனின் மனைவி மீனாட்சி சந்தோஷ் யாழ்ப்பாணம் - கோண்டாவிலை சேர்ந்தவர். எதிர்வரும் ஒக்ரோபர் 21ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சந்தோஷ் நாராயணன் பிரமாண்ட இசை நிகழ்வை நடத்தவுள்ளார். முன்னதாக, இந்த இசை நிகழ்ச்சி எதிர்வரும் 30ஆம் திகதி சந்தோஷ் நாராயணனின் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், திகதியில் மாற்றம் செய்யப்பட்டு, எதிர்வரும் ஒக்ரோபர் 21ஆம் திகதி யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் மாலை 4 மணிக்கு சந்தோஷ் நாராயணன் பங்கேற்கும் 'யாழ் கானம்' இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் டிசெம்பரில் இலங்கை வருகிறார்!



கொழும்பு, செப். 25

உமா ஓயா பல்துறை திட்டத்தை திறந்து வைப்பதற்காக ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசிக் எதிர்வரும் டிசெம்பர் மாதம் இலங்கை வரவுள்ளார்.

ஈரான் அரசின் உதவி திட்டத்தின் கீழ் உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் பதுளை மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள நீர்ப்பாசனம் மற்றும் நீர்மின் சக்தி வளாகமாகும். திட்டத்துக்கான ஆரம்ப மதிப்பீடுகள் 1989ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்தத் திட்டத்தின் பிரகாரம் தல்கொல்ல ஓயாவின் குறுக்கே ஒரு அணை கட்டுவதும், சுரங்கப்பாதை ஊடாக நீரை மின்திட்டத்துக்கு அனுப்பப்படுகிறது. உமா ஓயாவின் துணை நதிகளான மாத்தட்டிலா ஓயாவுக்கு குறுக்கே மற்றொரு அணை கட்டப்பட்டு சுரங்கப்பாதை வழியாக உமா ஓயா மின் நிலையத்துக்கு கொண்டு செல்லப்படும்.

எவ்வாறாயினும், 2008ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்த திட்டத்தின் கட்டுமான பணிகள் திறந்து வைக்கப்பட்டது. மொத்த திட்ட செலவாக சுமார் 529 மில்லியன் டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 85 வீதம் ஈரான் அரசாங்கத்தினால் வழங்கப்படுகிறது.

இதேவேளை உமா ஓயா நீர்மின் நிலையத்தின் அலகு 1இன் மின் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார். அதேபோல், எதிர்வரும் டிசெம்பர் மாதம் அலகு 2இன் மின் உற்பத்தி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த திட்டத்தை திறந்து வைக்கும் வகையிலேயே ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசிக் இலங்கை வரவுள்ளார். நியூயோர்க்கில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை அமர்வில் கலந்துகொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பக்க நிகழ்வாக ஈரான் ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடி இருந்தார். இதன்போதே உத்தியோகபூர்வ அழைப்பை ஜனாதிபதி ரணில் விடுத்திருந்தார்.

இலங்கை மற்றும் ஈரானுக்கு இடையிலான பொருளாதார தொடர்புகளை விரிவுபடுத்திக் கொள்வதில் இரு தரப்பும் ஆர்வம் செலுத்தியுள்ளன. ஈரான் ஜனாதிபதியின் இலங்கை வருகையின்போது கூட்டு பொருளாதார ஆணைக்குழுவை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. (ஐ)

# விருந்தில் ஏற்பட்ட தர்க்கம் கொலையில் முடிந்தது!

கொழும்பு, செப். 25

மிகிந்தலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சீப்புக்குளத்தில் விருந்தின்போது இடம்பெற்ற மோதலில் ஒருவர் உயிரிழந்தார் மிகிந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சீப்புக்குளம் பகுதியை சேர்ந்த எஸ். எம். கருணாரத்ன சிசிர குமார செனவிரத்ன என்ற 59 வயதான நபரே உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இரவு சீப்புக்குளம் பகுதியில் விவசாய பணிகள் நிறைவடைந்த நிலையில், கிராமிய நெல் திருவிழா வையடுத்து, அருகில் உள்ள வீடொன்றில் விருந்துபசாரம் இடம்பெற்றது.

இந்த விருந்தின்போது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறிய நிலையிலேயே இந்த் கொலை இடம்பெற்றுள்ளது. (ஐ)

# 2 இலட்சம் போதை மாத்திரைகளுடன் மன்னாரில் இளைஞர் ஒருவர் கைது!

மன்னார், செப். 25

2 இலட்சத்து 7 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் மன்னார் - தாராபுரம் பகுதியில் வசிக்கும் இளைஞர் ஒருவர் செய்யப்பட்டார் என்று மன்னார் ஊழல் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேக நபரைக் கைது செய்ததன் பின்னர், மன்னார் பிரிவு ஊழல் ஒழிப்புப் பிரிவைச் சேர்ந்த பிரதான பொலிஸ் குழுவால் குறித்த மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், சந்தேக நபருக்கு போதை மாத்திரைகளை கொண்டு வந்து வழங்கிய நபரை கைது செய்வதற்கான விசாரணைகளை மன்னார் பிரிவு ஊழல் ஒழிப்பு பிரிவினர் ஆரம்பித்துள்ளனர். (ஐ)

# இ. போ. ச. பேருந்தின் சாரதி கடத்தல்!

கொழும்பு, செப். 25

இ. போ. ச. பேருந்து சாரதி ஒருவர் நேற்று கடத்தப்பட்டார் என்று கம்பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாவெலயிலிருந்து கம்பளை நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸை வான் ஒன்றில் வந்த சிலர் மறித்து சாரதியை கடத்திச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பஸ் சாரதி வத்தேகம பிரதேசத்தை சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடத்தலுக்கான காரணம் இது வரை தெரியவராத நிலையில், சம்பவம் தொடர்பில் கம்பளை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

# பொலிஸார் என்று கூறி கொள்ளையிட்டவர் கைது!

கொழும்பு, செப். 25

பொலிஸ் உத்தியோகத்தர் என கூறி, மாணிக்கக்கல்லை கொள்ளையிட்டார் என்ற சந்தேகத்தில் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் கடந்த 17ஆம் திகதி சந்தேக நபர் மேலும் பலருடன் இணைந்து இந்தக் கொள்ளைக்கு திட்டமிட்டமை தெரிய வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளையிடப்பட்ட நீல மாணிக்கக்கல் சுமார் 12 இலட்சம் ரூபாய் பெறுமதியானது என்று கூறப்படுகின்றது.

தான் குறித்த மாணிக்கக்கல்லை வாங்க விரும்புவதாகக் கூறிய சந்தேக நபர் தொலைபேசியில் அழைப்பு விடுத்து, தனது சகா ஒருவருடன் காரில் சென்று மாணிக்கக்கல்லை பரிசோதித்துக் கொண்டிருந்தார்.

அப்போது, மோட்டார் சைக்கிளில் பொலிஸ் அதிகாரி போல் வேடமணிந்து வந்த மற்றுமொரு சந்தேக நபர், மாணிக்கக்கல் உரிமையாளரை பயமுறுத்திவிட்டு கொள்ளையிட்டுச் சென்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஈழநாடு



# இலங்கையின் மனித உரிமைகள் மீறல் சர்வதேச விசாரணையே அவசியம்!

## தமிழரசு கட்சியின் சம்பந்தன் வலியுறுத்து

கொழும்பு, செப். 25

**இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள், மனிதாபிமான சட்ட மீறல்கள் சம்பந்தமாக உண்மைகளைக் கண்டறியப்பட வேண்டுமாயின் ஐக்கிய நாடுகளின் பிரசன்னத்துடனான சர்வதேச விசாரணையொன்றே அவசியம் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா. சம்பந்தன் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.**

உள்நாட்டு போர் நடைபெற்ற காலத்திலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களிலும் கொல்லப்பட்டவர்கள் இந்த நாட்டின் பிரஜைகள் என்பதை அரசாங்கம் புறந்தள்ளிவிட்டு தொடர்ந்தும் பொறுப்பின்றி செயல்பட முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது கூட்டத்தொடரில் வெளியிடப்பட்டுள்ள இலங்கையில் மீளிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் ஆகியவற்றை முன்னேற்றம் சம்பந்தமான ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க்கின் எழுத்துமூலமான அறிக்கை மற்றும், 2019ஆம் ஆண்டு நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சம்பந்தமாக சர்தேச விசாரணையொன்று கோரப்படுகின்றமை ஆகிய விடயங்கள் சம்பந்தமாக கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் மீறப்பட்ட மனித உரிமைகள், மனிதாபிமான சட்ட மீறல்கள் சம்பந்தமாக அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும் என்றும் நல்லிணக்கம் கட்டியெழுப்பப்படுவதற்கு இனப்பிரச்னைக்கான நிரந்தரமான தீர்வு வழங்கப்பட வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும், சர்வதேச தரப்பினரும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன.

ஆனால், இலங்கை அரசாங்கம் உள்நாட்டில் எவ்விதமான முன்னேற்றகரமான செயற்பாடுகளையும் தொடராதிருப்பதோடு, ஒருசில விடயங்களை ஆரம்பித்திருப்பது போன்று வெளிப்படுத்தினாலும் அவற்றிலும் காலதாமதத்தை செய்து வருகின்றது.

மேலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம், அவதானிப்பு அறிக்கை உள்ளிட்டவற்றையும் தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கம் நிராகரித்து வருகின்றது.

இலங்கை அரசாங்கம் ஒரு விடயத்தினைப் புரிந்துகொள்ள வேண்டும். உள்நாட்டுப் போரின் போது, இளைஞர்களும், யுவதிகளும் பாதுகாப்பை தேடி படையினரிடத்தில் சரணடைந்தார்கள். அதன் பின்னர் அவர்கள் வலிந்து காணமலாக்கப்பட்டுள்ளார்கள். படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

அவர்கள் இந்த நாட்டின் பிரஜைகள். அவர்களுக்கான பாதுகாப்பை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். ஆனால் அந்தக் கடமையிலிருந்து அரசாங்கம் விலகியுள்ளது.

இந்நிலையில், சரணடைந்தவர்கள், கொலைசெய்யப்பட்டவர்கள், காணாமலாக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் உண்மைகள் கண்டறியப்பட வேண்டும். அதற்கு காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

இந்தச் செயற்பாட்டை முன்னெடுக்க முடியாது என்று அரசாங்கம் தொடர்ச்சியாக புறந்தள்ளிச் செயற்பட முடியாது. அதுமட்டுமன்றி உள்ளக ரீதியில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று காரணம் கூறிக் காலங்கடத்தவும் முடியாது.

உள்ளக ரீதியில் எவ்விதமான முன்னேற்றகரமான விசாரணைகளும் இடம்பெறவில்லை என்பது கடந்த காலங்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, உண்மைகளைக் கண்டறிவதற்காக ஐ.நாவின் பங்கேற்புடன் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

# மக்களின் நிதிப் பங்களிப்பில் குப்பிழானில் கிராமிய செயலகம்!

## அரச அதிபர் திறந்து வைத்தார்



யாழ்ப்பாணம், செப். 25

மக்களின் பங்களிப்புடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குப்பிழான் தெற்கு கிராமிய செயலகம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை குப்பிழான் விவசாய சம்மேளனத் தலைவர் செ. நவரத்தினராசா தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அராசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகவும் உடுவில் பிரதேச செயலர் தவச்செல்வம் முகுந்தன் சிறப்பு விருந்தினராகவும் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி கெ. இந்திரமோகன் கௌரவவிருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

கிராமியச் செயலகக் கட்டடத் தொகுதியின் பிரதான வாயிலை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நாடா வெட்டிச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலயத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் நிகழ்வில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார்.

இந்த நிகழ்வில் குப்பிழானை சேர்ந்த புலம்பெயர் வாழ் அன்பர்கள் நால்வரின் நிதிப் பங்களிப்பில் பொருளாதார நலிவுற்ற குடும்பங்களை சேர்ந்த 55 மாணவர்களுக்கான புத்தகப் பைகள் மாணவர்களின் பெற்றோர்களிடம் கையளிக்கப்பட்டன.

இதேவேளை, ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சிறீஸ்கந்தமூர்த்தி மறைந்த தனது வாழ்க்கைத் துணைவியார் திருமதி ஞானலஷ்மி மற்றும் துணைவியாரின் பெற்றோரான சைவபூஷணம் நல்லையா கனகாம்பிகை ஞாபகார்த்தமாக மனமுவந்து நன்கொடையாக இரண்டு பரப்பு காணி வழங்கியிருந்தார். இந்த காணியில் குப்பிழான் தெற்கு கிராம சேவகர் பணிமனை, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் பணிமனை, சமுர்த்தி உத்தியோகத்தர் பணிமனை மற்றும் சுகாதார அலகு என்பன ஒரே இடத்தில் அமையும் வகையில் அரசாங்கத்தின் எந்தவித நிதியுமின்றிப் புலம்பெயர் வாழ் குப்பிழான் கிராம மக்கள் மற்றும் கிராம மக்களின் பங்களிப்பில் 30 இலட்சம் ரூபாய் செலவில் இந்த கிராமிய செயலகம் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# டொலர் கிடைக்காததாலேயே ஜனாதிபதி சீனா செல்கின்றார்

## டியூ. குணசேகர தெரிவிப்பு

கொழும்பு, செப். 25

வேறு நாடுகளிடம் இருந்து டொலர்களை பெற முடியாத காரணத்தாலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சீனாவுக்கு பயணம் செய்யவுள்ளதாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி யின் தலைவர் டியூ. குணசேகர தெரிவித்துள்ளார்.



கொழும்பில் உள்ள கம்யூ னிஸ்ட் கட்சியின் பணிமனை யில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

இன்னும் சில நாட்களில் நிதியுதவியை எதிர்பார்த்து ரணில் விக்ரமசிங்க சீனாவுக்கு செல்ல உள்ளார். வேறு நாடுகளிடம் இருந்து நிதி உதவிகள் கிடைக்காது.

இரண்டு முறை ஜப்பானுக்கு சென்றபோதிலும் நிதியுதவி வழங்கும் பலம் ஜப்பானிடம் இல்லை. உலகிலேயே அதிகவான அந்திய செலவாணி கையிருப்பு சீனாவிடமே இருக்கின்றது. சீனாவிடம் 4இலட்சம் கோடி டொலர்கள் கையிருப்பில் உள்ளது. அமெரிக்காவிடம் கூட இப்படியான தொகை கையிருப்பில் இல்லை.

உலகில் அதிகளவான அந்திய செலாவணி கையிருப்பில் இருக்கும் இரண்டாவது நாடு ஜப்பான், அந்த நாட்டிடம் ஒரு இலட்சம் கோடி டொலர்கள் கையிருப்பில் உள்ளன.

மூன்றாவது நாடு சுவிற்சர்லாந்து, அந்நாட்டிடம் ஒரு இலட்சம் கோடிக்கும் சற்று குறைவான தொகை கையிருப்பில் உள்ளது. நான்காவது நாடு ரஷ்யா, ஐந்தாவது நாடு இந்தியா, அமெரிக்கா 13ஆவது இடத்தில் உள்ளது. முடிந்தால் இந்த செய்தியை ஊடகங்களில் வெளியிடுமாறு சவால் விடுக்கின்றேன் எனவும் டியூ. குணசேகர குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# பயங்கரவாத, நிகழ்நிலை சட்ட மூலத்தை அரசு உடன் விலக்கிக்கொள்ள வேண்டும்!

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்

கொழும்பு, செப். 25

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் ஆகியவற்றை அரசாங்கம் உடனடியாக விலக்கிக்கொள்ளவேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரசாங்கம் உடனடியாக பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம், நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் ஆகியவற்றை உடனடியாக விலக்கிக்கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இந்த இரு சட்டமூலங்களும் பொதுமக்களின் சுதந்திரம் மீது கடுமையான தலையீடுகளை செய்யும் எனவும் எச்சரித்துள்ளது.

கடந்த 15ஆம் திகதியும் 18ஆம் திகதியும் வர்த்தமானியில் வெளியிட்ட் சட்ட மூலங்களை அரசாங்கம் உடனடியாக விலக்கிக் கொள்ளவேண்டும் அவற்றை தொடர்ந்தும் முன்னெடுக்ககூடாது எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் கூட்டத்தில் இரு சட்ட மூலங்களும் பொதுமக்களின் சுதந்திரம் மீது தீவிரமான தலையீடுகளை மேற்கொள்ளும் ஜனநாயகத்தின் மீதும் நாட்டின் சட்டத்தின் ஆட்சிமீதும் கடும் தாக்கத்தை ஏற்படுத்தும் என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இரண்டு சட்டமூலங்கள் தொடர்பிலும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உட்பட அதனுடன் தொடர்புபட்டவர்களுடன் எந்த விதமான கலந்தாலோசனைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பயங்கரவாத எதிர்ப்பு தடைச் சட்டம் குறித்த முந்தைய வரைபு குறித்தும் தங்களுடன் கலந்தாலோசிக்கவில்லை என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான சட்டமூலங்களை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு முதல் அரசாங்கம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடன் கலந்தாலோசனைகளை மேற்கொள்ளவேண்டும் இந்த சட்டமூலங்கள் சமூகத்துக்கு பெரும்பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

# நிதிக் குற்றங்களை விசாரிப்பதற்கு விசேட நீதிமன்றை நிறுவவேண்டும்

## மத்திய வங்கி அறிவிப்பு

கொழும்பு, செப். 25

**நிதிக் குற்ற வழக்கு விசாரணைகளுக்காக விசேட நீதிமன்றம் நிறுவப்பட வேண்டும் என்று இலங்கை மத்திய வங்கியின் நிதி விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.**

2021/22 ஆம் ஆண்டிற்கான நிதி மோசடி மற்றும் பயங்கரவாத நிதியுதவி குறித்த தேசிய இடர் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியின் நிதி விசாரணைப் பிரிவு இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளது.

முறைசாரா வகையில் பணம் அனுப்புதல், உண்டியல் முறைமை என்பன நாட்டில் பண மோசடி செய்யும் அபாயகரமான முறையாக மாறியுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக ஆபத்துள்ள பண மோசடி முறைகளில் ரியல் எஸ்டேட் முகவர்கள், வங்கித்துறை மற்றும் நிதி நிறுவனங்கள் இரண்டாவது இடத்தில் உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பண மோசடி என்பது நிதி சொத்துகளை சட்டவிரோதமாக பெறுதல் மற்றும் சம்பாதிக்கப்பட்ட முறைமை என்பவற்றை வெளியிடாமல் பயன்படுத்துவதைக் குறிக்கின்றது.

அதற்கமைய, இலங்கை மத்திய வங்கி தனது அண்மைய அறிக்கையில் பண மோசடி தடுப்பு தொடர்பான புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

(ஐ)

# முட்டை, கோழி இறைச்சியை ஏற்றுமதி செய்வதற்கு திட்டம்!

## சாத்தியங்களை ஆராய அமைச்சர் பணிப்பு

கொழும்பு, செப். 25

முட்டை மற்றும் கோழி இறைச்சியை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் தொடர்பில் ஆராயுமாறு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மாலைத்தீவு உட்பட பல நாடுகளுக்கு ஏற்கனவே கோழி இறைச்சி மற்றும் முட்டை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் இலங்கை முட்டைகளை இறக்குமதி செய்ய வேண்டும்.

எவ்வாறாயினும், அடுத்த வருடத்துக்குள் நாட்டுக்குள் முட்டை மற்றும் கோழி இறைச்சி உற்பத்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

2024 ஒகஸ்ட் மாதத்துக்குள் முட்டை உபரியாக உருவாகும் என எதிர்பார்க்கப்படுவதாகவும், உலக சந்தையில் உள்ள வாய்ப்புகளை ஆராய ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளதாகவும் விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# தொழில்பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்




வடமராட்சி, செப். 25

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் தொழில் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்குக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபை உத்தியோகத்தர் தலைமையில தம்பன் துசாந்தன் தலமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் ஆ. சிவபாலசுந்தரன், பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி, நைற்றா மாவட்ட முகாமையாளர், யு. என். டி. பி. திட்ட உத்தியோகத்தர்கள், பிரித்தானிய உயரஸ்தானிகரக அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(ஐ-02)

# 2024இற்குள் பாடப் புத்தகங்கள் மாணவர்களுக்கு வழங்கப்படும்!

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

கொழும்பு, செப். 25

2024 ஆம் ஆண்டு ஆரம்பிக்க முன்னர் அந்த ஆண்டுக்கான பாடப் புத்தகங்களை பாடசாலை மாணவர்களுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

ஹோமாகம, பிடிபனவில் அமைந்துள்ள கல்வி வெளியீடுகள் திணைக்களத்தின் பிரதான களஞ்சியசாலையில் இருந்து நாடளாவிய ரீதியில் உள்ள பிராந்திய மத்திய நிலையங்களுக்கு பாடப் புத்தகங்கள் விநியோகிக்கப்படும் இடத்தை பார்வையிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு மட்டுமே பாடசாலை சீருடைகள் வழங்கப்படும் என்ற குற்றச்சாட்டுகளை அமைச்சர் இதன்போது நிராகரித்தார்.



சீருடை துணிகள், மதிய உணவு ஆகிய இரண்டும் வழமைபோன்று தாமதமின்றி வழங்கப்படும். இந்த அனைத்து பௌதிக வசதிகளையும் வழங்குவதற்கான எதிர்பார்ப்பு 2024ஆம் ஆண்டின் இறுதிக்குள் சரியான நேரத்தில் பாடத் திட்டத்தை உள்ளடக்கியது. கோவிட் 19 தொற்றுநோய்களின் போது சீர்குலைந்த அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் மீட்டெடுப்பதாகும்.

கடந்த ஆண்டை ஒப்பிடும் போது, இந்த ஆண்டு பாடசாலை பாடப் புத்தக அச்சிடும் பணியை, குறைந்த செலவில், உரிய நேரத்தில் செய்து முடித்ததால் 400 கோடி ரூபாயை அரசாங்கத்துக்கு வழங்க முடியும் என அமைச்சர் தெரிவித்தார்.

அரச அச்சு நிறுவகம் இலாபம் ஈட்டத் தொடங்கியுள்ளது. எதிர்காலத்தில் அனைத்து பாடசாலை பாடப் புத்தகங்கள், பயிற்சி புத்தகங்கள் மற்றும் பிற அரச ஆவணங்களை அச்சிடுவதற்கு அரச அச்சகத்துக்கு வழங்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நாட்டில் கல்வி சீர்திருத்தங்களை உறுதிப்படுத்துவதற்கு, இந்த நிறுவனங்கள் மற்றும் ஊழியர்களின் ஆதரவும் அர்ப்பணிப்பும் இன்றியமையாதது என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ)



# திலீபன் நினைவூர்திக்கு வடமராட்சியில் அஞ்சலி

வடமராட்சி செப். 25

தியாக தீபம் திலீபன் நினைவூர்திக்கு வடமராட்சியின் நெல்லியடி, பருத்தித்துறை பகுதிகளில் மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை வடமராட்சி கிழக்கு கோவில் பகுதியல் இருந்து ஆரம்பித்த திலீபன் நினைவூர்தி நேற்றுமுன்தினம் 6:30 மணியளவில் நெல்லியடியை வந்தடைந்தது. தொடர்ந்து பருத்தித்துறை ஊடாக இன்பருட்டிக்கு சென்றது. நெல்லியடி, பருத்தித்திறை பகுதியில் மக்கள் மலரஞ்சலி செலுத்தியதை தொடர்ந்து இன்பருட்டியில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தினர்.

இந்த நினைவூர்தியை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-02)

# தரம் குறைந்த லஞ்ச்சீற்களை தயாரிப்போர் மீது நடவடிக்கை

கொழும்பு, செப். 25

மத்திய சுற்றாடல் அதிகார சபை கடந்த வாரம் கண்டி, பேராதனை மற்றும் மத்திய மாகாணத்தின் பல பகுதிகளில் 20 மைக்ரோனுக்கு குறைவான லஞ்ச்சீற்களை தயாரிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்தது.

மத்திய மாகாணத்தில் உள்ள நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் உதவியுடன் மத்திய சுற்றாடல் அதிகார சபை அதிகாரிகளால் இந்த சோதனை நடத்தப்பட்டது. தரம் குறைந்த மதிய உணவு சீட்டுகளை விற்பனை செய்த 400 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டது. பிளாஸ்ரிக் கைப்பிடிகள் கொண்ட சிறிய பொலித்தீன் பைகள் மற்றும் கொட்டன் பட்கள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள நபர்களையும் அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

பொலிஸாரின் உதவியுடன் எதிர்காலத்தில் ஏனைய பிரதேசங்களிலும் இவ்வாறான சோதனைகள் மேற்கொள்ளப்படும் என அதிகாரசபை தலைவர் சுபுன் பத்திரகே தெரிவித்தார்.

தரம் குறைந்த பொலித்தீன் தாள்கள் மற்றும் பைகள் மற்றும் பிற மக்காத பொருட்களை உற்பத்தி செய்வதற்கு தடை விதித்து வர்த்தமானி அறிவித்தல் மூலம் முன்னர் அறிவிக்கப்பட்ட போதிலும், பல உற்பத்தியாளர்கள் மற்றும் கடை உரிமையாளர்கள் அந்த தடையை புறக்கணித்தது வருத்தமளிக்கிறது. நாடு முழுவதும் உள்ள அனைத்து சிறப்பு அங்காடிகளும் இந்தத் தடையை மீறவில்லை என்றும், சுற்றுச்சூழலுக்கு உகந்த பொலித்தீன் பைகள் மற்றும் லஞ்ச்சீற்களை மட்டுமே விற்பனை செய்வதாகவும் அவர் தெரிவித்தார்.

(ஐ)

# அரிசிமலை மக்களை அச்சுறுத்தி பிக்குவால் காணிகள் அபகரிப்பு!

திருகோணமலை, செப். 25

**அரிசிமலையில் பொதுமக்களை அச்சுறுத்தி அவர்களுக்கு சொந்தமான காணிகளை பிக்கு ஒருவர் அடாத்தாகப் பிடித்து வருகிறார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அத்துடன், எதிர்ப்பு வெளியிட்டவரை கனரக இயந்திரத்தின் மூலம் அச்சுறுத்தியதில் வாகனம் மோதி பெண் ஒருவர் காயமடைந்தார் என்று அறிய வருகின்றது.**

திருகோணமலை - புல்மோட்டை - அரிசிமலை இராணுவம் மற்றும் கடற்படை ஆதரவோடு புதிய பௌத்த விகாரை அமைத்து வரும் பனாமுரே திலகவங்ச என்ற பௌத்த பிக்குவும் அவரின் சகோதரரும் தம்மை அச்சுறுத்தி காணிகளை அபகரித்து வருகின்றனர் என்று அப்பகுதியின் முஸ்லிம் மக்கள் குற்றஞ்சாட்டினர்.

கடந்த வெள்ளிக்கிழமை 6 குடும்பங்களுக்கு சொந்தமான விவசாய காணிகள் இவ்வாறு அபகரிக்கப்பட்டன என்றும் கூறப்பட்டது.

காணிகள் பிக்குவால் அபகரிக்கப்படுவது குறித்து அறிந்தவர்கள் அங்கு சென்று எதிர்ப்பில் ஈடுபட்டனர். அப்போது கனரக இயந்திரத்தை இயக்கி பிக்குவின் சகோதரர் அவர்களை அச்சுறுத்தி விரட்டினார்.

அந்தச் சமயம், வாகனம் பெண் ஒருவரை முட்டியதில் அவர் காயமடைந்தார். சம்சுதீன் சுலைகா என்ற பெண்ணே இவ்வாறு காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(ஐ)

# காத்தான்குடியில் கடலரிப்பை தடுக்க ரூ. 15 இலட்சம் ஒதுக்கீடு

மட்டக்களப்பு, செப். 25

காத்தான்குடி கரையோரத்தில் நிலவும் கடலரிப்பை தடுப்பதற்கு கல் வேலி அமைப்பதற்கு 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு காத்தான்குடி கடற் கரையோரத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பை தடுப்பதற்காக நகர அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலில் கரையோர பாதுகாப்பு அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு துரித நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட கரையோர மூலவளங்கள் முகாமைத்துவ திணைக்கள பிராந்திய பொறியியலாளர் முருகேசன் துளசிதாசன் தெரிவித்தார்.

கடலரிப்பு பிரதேசத்தில் சுமார் 80 மீற்றர் நீளத்திலும் மூன்று மீற்றர் ஆழத்திலும் கற்பாறைகளை கொண்டு பாதுகாப்புவேலி அமைக்கப்பட்டு வருவதாகவும் இதற்கென கரையோர பாதுகாப்பு தாழ்நிலங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு முதற்கட்டமாக 15 இலட்சம் ரூபாய் நிதியினை ஒதுக்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# காரைதீவு முன்னாள் தவிசாளர்மீது 3 மணி நேரம் பொலிஸார் விசாரணை!

காரைதீவு, செப். 25

காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரியின் எழுத்து மூல கடிதத்தின் பிரகாரம் காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் ஜெயசிறில் கிழக்கு மாகாணம் குற்றத்தடுப்பு உளவு பிரிவினரின் திருகோணமலை தலைமை பணிமனையில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை சுமார் 3 மணி நேரம் விசாரணை நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இது குறித்து அவர் கருத்து வெளியிடுகையில்,

"இந்த நாட்டிலே ஜனநாயக ரீதியாக தமிழர்களுடைய இளைஞர் உரிமைக்காக குரல் கொடுத்து செயல்படுகின்ற எங்களுடைய செயல்பாட்டை மழுங்கடிப்பதற்காகவும் மன உளைச்சலுக்கு ஆளாக்கி எங்களை ஓரங்கட்டுவதற்காகவும் பல வருட காலமாக விசாரணை நீதிமன்ற வழக்குகள் இடம் பெற்று வந்து கொண்டே இருக்கின்றது.

உண்மையில் எந்தவித பிழையும் செய்யாத நாங்கள் இவ்வாறான பெரிய குற்ற பிரிவுகளினால் விசாரணைக்கு அழைக்கப்படுகின்றோம். ஆனால் பல குற்றவாளிகள் பதவிகளோடு அரசாங்கத்தின் அதிகாரத்தோடும் இன்று வெளியில் உலாவிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் பாதுகாப்பை கொடுத்துவிட்டு குற்றமில்லாத எங்களை குற்றவாளி போன்று துன்புறுத்துவதும் மன உளைச்சலுக்கு ஆளாக்குவதும் இந்த அரச செயல்பாடு ஆகும்.

உண்மையிலேயே ஈஷ்டர் குண்டு தாக்குதலில் கூட பல ஆவணம் இருக்கக்கூடிய பல ஆயுததாரிகள் பல கொலை சம்பவங்களோடு தொடர்பு பட்ட விடயங்கள் என்றும் பத்திரிக்கை வாயிலாகவும் பாராளுமன்றத்திலும் பல சாட்சியளிக்கப்பட்டும் அவ்வாறானவர்களை வெளியில் விட்டுவிட்டு எவ்விதமான குற்றங்களையும் செய்யாத எங்களுக்கு விசாரணை செய்வது என்பது நாங்கள் இந்த இலங்கை நாட்டிலே துன்புறுத்தப்பட்டு வாழ்ந்து கொண்டிருப்பது என்பது மனக் கவலை."என்றார்.



# 40ஆவது ஆண்டுவிழாவை ஒட்டி இரத்த தான முகாம் நடந்தது!

மட்டக்களப்பு, செப். 25

பாலமுனை நஷனல் விளையாட்டுக்கழகத்தின் 40ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இரத்ததான முகாம் நேற்று பாலமுனை அலகார் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

காத்தான்குடி ஆதார மருத்துவமனையின் ஆதரவுடன் இந்த இரத்ததான முகாம் நடைபெற்றது.

பாலமுனை நெஷனல் விளையாட்டுக்கழகத்தின் தலைவர் எம்.எம்.ஏ முரீத் தலைமையில் நடைபெற்ற இந்த இரத்ததான முகாம் நிகழ்வில் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பொறுப்பாளர் டாக்டர் திருமதி அலீமா அப்துர் ரஹ்மான் உட்பட அதன் தாதியர்கள் ஊழியர்கள் காத்தான்குடி ஆதார மருத்துவமனை குருதி நன்கொடையாளர் சம்மேளனத்தின் பிரதி நிதிகள் பாலமுனை நஷனல் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(ஐ)

# அமிர்தகழி கப்பலேந்திமாதா ஆலயத்தின் திருவிழா கொடியிறக்கத்துடன் நிறைவு!

மட்டக்களப்பு, செப். 25

மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் பழமை வாய்ந்த கத்தோலிக்க ஆலயமான அமிர்தகழி தூய கப்பலேந்தி அன்னை ஆலயத்தின் வருடாந்த திருவிழா கூட்டு திருப்பலியுடன் கொடியிறக்கப்பட்டு நிறைவுபெற்றது.

கடந்த 15 ஆம் திகதி பங்குத்தந்தை இன்னாசி ஜோசப் அடிகளாரின் தலைமையில் கொடியேற்றப்பட்டு, நவ நாட்கள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நேற்று மாலை நற்கருணை ஆராதனை வழிபாட்டுடன், திருச்சொரூப பவனி இடம்பெற்றது.

ஆலய வருடாந்த திருவிழாவை முன்னிட்டு இன்று இடம்பெற்ற விசேட திருவிழா கூட்டுத் திருப்பலியை மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் ஜோசெப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் அருட்தந்தையர்கள் இணைத்து ஒப்புக்கொடுத்தனர்.



திருப்பலியினை தொடர்ந்து ஆலய முன்றலில் இடம்பெற்ற அன்னையின் திருச்சொரூப ஆசீருடன் கொடியிறக்கம் இடம்பெற்றது.

கப்பலேந்தி அன்னையின் திருச்சுரூபம் வாவியில் கொண்டு செல்லப்பட்டு வாவி ஆசீர்வதிக்கப்பட்டது.

திருவிழா திருப்பலியில் மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்து வருகை தந்த பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.

(ஐ)

# மட்டக்களப்பில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தீவிரம்!

மட்டக்களப்பு, செப். 25

மட்டக்களப்பு மாவட்டத்தில் பருவமழை பெய்ய ஆரம்பித்து இருப்பதால் டெங்கு நோய் தீவிரமாக பரவும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இதனை கருத்தில் கொண்டு சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஜி சுகுணனின் பணிப்புரையின் பேரில் மட்டக்களப்பு பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் திருமதி லதாகரனின் வழிகாட்டலில் நேற்று காலை கோட்டைமுனை பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந் நடவடிக்கையின் போது ஆறு பிரிவுகளாக சுகாதார பகுதியினர் பிரிக்கப்பட்டு 168 வீடுகளில் டெங்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. டெங்கு பரவும் இடங்களாக வைத்திருந்த இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் தேவையற்ற பொருட்கள் அகற்றப்பட்டு மட்டக்களப்பு மாநகர சபை சுத்திகரிப்பு தொழிலாளர்களால் அவைகள் அங்கிருந்து அகற்றப்பட்டன.

இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு மட்டக்களப்பு மாநகர சபையின் சுகாதார பிரிவினரும் பங்கு கொண்டிருந்தனர்.

# மின்மானியில் மோசடி செய்த இருவர் பொலிஸாரால் கைது!

மட்டக்களப்பு, செப். 25

மட்டக்களப்பு பொலிஸ் தலைமையக பிரிவிலுள்ள இருதயபுரம் பகுதியில் மின்மானியில் மோசடி செய்த வீட்டு உரிமையாளர்கள் இருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரு வீடுகளில் பொருத்தப்பட்டிருந்த மின்மானியில் சட்டவிரோதமாக மோசடி செய்து மின்சாரத்தை பெற்று வந்ததமை மின்சார சபையால் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து, கொழும் பில் இருந்து வருகை தந்த உத்தியோகத்தர்கள் பொலிஸாருடன் அந்த வீடுகளை சோதனையிட்டனர்.

இதன்போது, மின்சார மீற்றரை சோதனையிட்டபோது அதில் இருந்து திருட்டுத்தனமாக மின்சாரம் பெற்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த இரு வீட்டின் உரிமையாளர்களையும் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

# பாகிஸ்தானின் பொருளாதாரம் தோல்வி; 1.25 கோடி பேர் வறுமைக்கோட்டுக்குள்!

வாஷிங்டன், செப். 25

**பாகிஸ்தானின் பொருளாதார மொடல் தோல்வி அடைந்துவிட்டதாகவும், கடந்த ஓராண்டில் மட்டும் 1.25 கோடி மக்கள் வறுமைக்கோட்டுக்கு கீழே சென்றுவிட்டனர் என்று உலக வங்கி அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது.**

**இது தொடர்பாக பாகிஸ்தானுக்கான உலக வங்கியின் தலைமை பொருளாதார நிபுணர் டோபியாஸ் ஹக் கூறுகையில்,**



“கடந்த ஒரு நிதி ஆண்டில், பாகிஸ்தானில் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது. 34.2 சதவீதமாக இருந்த வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களின் எண்ணிக்கை தற்போது 39.4 சதவீதமாக உயர்ந்துள்ளது. புதிதாக 1.25 கோடி பேர் வறுமைக்கோட்டுக்குக் கீழே வந்துள்ளனர். இதன் மூலம் தற்போது 9.5 கோடி மக்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழே தள்ளப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் பொருளாதார மாடல், வறுமையைக் குறைக்கவில்லை. மாறாக, பாகிஸ்தானின் பொருளாதாரத்திற்கு இணையான பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளைவிட மக்களின் வாழ்க்கைத் தரம் சரிந்துவிட்டது.

பொருளாதாரப் பாதுகாப்புக்கு பாகிஸ்தான் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். குறிப்பாக, விவசாயம் மற்றும் ரியல் எஸ்டேட் துறைகளில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். வீண் செலவுகள் நிறுத்தப்பட வேண்டும். பாகிஸ்தானில் மனித வளர்ச்சி குறைந்துள்ளது. நிலையான நிதி நிலை இல்லை. தனியார் துறை அதிகமாக கட்டுப்படுத்தப்படுகிறது.

பாகிஸ்தானில் புதிதாக வரக்கூடிய அரசு விவசாயம் மற்றும் எரிசக்தித் துறையில் சீர்திருத்தத்தை மேற்கொண்டாக வேண்டும். மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 5 வீத வரியை உயர்த்த வேண்டும் 2.7 வீத செலவை குறைக்க வேண்டும். பாகிஸ்தானின் பொருளாதாரம் இன்று மிகவும் கவலை தரக்கூடியதாக இருக்கிறது. இதனால், பொருளாதாரத்தோடு மனித வளர்ச்சியும் கவலை தரக்கூடியதாக உள்ளது” என்று தெரிவித்துள்ளார். (ஐ)



# புகைபிடிக் வருகிறது தடை பிரிட்டன் பிரதமர் ஆலோசனை

இங்கிலாந்தின் அடுத்த தலைமுறையினர் புகை பழக்கத்துக்கு அடிமையாகி விடக்கூடாது என்பதற்காக புகையிலை எதிர்ப்பு நடவடிக்கைகளை பிரதமர் ரிஷி சுனக் மேற்கொண்டுள்ளார். இதையடுத்து இங்கிலாந்தில் சிகரெட்க்கு தடை விதிப்பது குறித்து ரிஷி சுனக் ஆலோசித்து வருகிறார் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

2009 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி மற்றும் அதற்கு பிறகு பிறந்தவர்களுக்கு புகையிலையை விற்க தடை விதிக்கப்பட இருப்பதாக தெரிய வந்துள்ளது. இது தொடர்பாக இங்கிலாந்து அரசின் செய்தி தொடர்பாளர் இ-மெயிலில் அனுப்பிய செய்தி குறிப்பில் கூறி இருப்பவை வருமாறு,

இங்கிலாந்தில் 2030 ஆம் ஆண்டுக்குள் புகைபிடிக்காதவர்களாக இருக்க வேண்டும் என்பதுதான் எங்கள் இலட்சியம். புகைப்பழக்கத்தில் இருந்து விடுபடுமாறு பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளோம். புகை பிடிப்பவர்களின் சதவீதத்தை குறைக்க ஏற்கனவே நடவடிக்கை எடுத்து வருகிறோம் - என்றார். (ஐ)



# குடியேறிகளின் கல்லறையாக மத்தியதரைக் கடல் மாறியுள்ளது

## பாப்பரசர் பிரான்சிஸ் கவலை

பாரிஸ், செப். 25

“கடலில் மூழ்கும் மக்கள் கண்டிப்பாகக் காப்பாற்றப்பட வேண்டும்” என்று கூறியுள்ள புனித பாப்பரசர் பிரான்ஸிஸ், புகலிடம் தேடிக் கடல் கடந்து வருகின்றவர்கள் விடயத்தில் “மனிதத்தை” மதிக்குமாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

“மோதல்கள், வறுமை மற்றும் சுற்றுச்சூழல் பேரழிவுகள் ஆகியவற்றிலிருந்து தப்பி வெளியேறுவோர் , ஒரு சிறந்த எதிர்காலத்திற்கான தங்களது தேடல் அடியோடு நிராகரிக்கப்படுவதை மத்தியதரைக் கடலில் காண்கிறார்கள். இந்த அற்புதமான கடல் ஒரு மகத்தான கல்லறையாக மாறியுள்ளது, அங்கு பல சகோதர சகோதரிகள் நல்லடக்கத்துக்கான உரிமை கூட இன்றி உயிரிழக்கிறார்கள்”-என்றும் பாப்பரசர் மன வருத்தத்துடன் தெரிவித்திருக்கிறார்.

இரண்டு நாள் பயணமாக பிரான்ஸின் மத்தியதரைக் கடல் நகரமான மார்செய்க்கு நேற்று முன்தினம் வருகை தந்த பாப்பரசர் பிரான்ஸிஸ் அங்குள்ள நோத்த-டாம்-து-லா- கார்ட் பசிலிக்கா கத்தோலிக்க ஆலயத்தின் குன்றின் உச்சியில் - மத்தியதரைக் கடலை நோக்கிய திசையில் இருந்தவாறு - உரையாற்றினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

# கனடாவுடனான மோதல் விவகாரம் அமெரிக்கா இந்தியாவுக்கே ஆதரவு!

## பென்ரகனின் முன்னாள் அதிகாரி சொல்கிறார்

புதுடெல்லி, செப். 25

இந்திய உறவா அல்லது கனடா உறவா என முடிவெடுக்க வேண்டிய நிலை வந்தால், அமெரிக்கா இந்தியாவுக்குதான் ஆதரவு அளிக்கும் என்று அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்ரகனின் முன்னாள் அதிகாரி மைக்கல் ரூபின் தெரிவித்தார்.

கனடாவின் வான்கூவர் நகரில் காலிஸ்தான் தீவிரவாதி ஹர்தீப் சிங் நிஜார் கடந்த ஜூன் மாதம் சுட்டு கொல்லப்பட்டார். இந்தக் கொலையில் இந்தியாவுக்கு தொடர்பிருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வெளிப்படையாக குற்றம்சாட்டினார். இதற்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்தது. இதனால் இரு நாடுகளுக்கிடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த பிரச்னையில் தங்களோடு இணையுமாறு அமெரிக்காவுக்கு கனடா அழைப்புவிடுத்தது. இதுகுறித்து அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்ரகனின் முன்னாள் அதிகாரி மைக்கல் ரூபின் தெரிவித்தவை வருமாறு,




கனடாவின் இந்த குற்றச்சாட்டு, இந்தியாவை விட கனடாவுக்குத்தான் அதிக அபாயத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இந்திய உறவா அல்லது கனடா உறவா என முடிவெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டால், அமெரிக்கா இந்தியாவுடன்தான் துணை நிற்கும்.

இரண்டு நண்பர்களுக்கிடையில் நாம் தேர்வு செய்ய வேண்டியிருந்தால், நிஜார் ஒரு தீவிரவாதி என்பதாலும், இந்தியா மிகவும் முக்கியமானது என்பதாலும் இந்த விஷயத்தில் இந்தியாவைத் தேர்ந்தெடுக்கப் போகிறோம். இந்தியாவுடனான உறவு எங்களுக்கு முக்கியமானது. கனடா,இந்தியாவோடு சச்சரவில் ஈடுபடுவது, ஓர் எறும்பு, யானையுடன் சண்டையிடுவது போலாகும். தனது குற்றச்சாட்டுக்கு போதிய ஆதாரத்தை தர அதிபர் ஜஸ்டின் ட்ரூடோவால் முடியவில்லை. இந்தியாவால் தீவிரவாதி என முத்திரை குத்தப்பட்ட ஒருவருக்கு அடைக்கலம் கொடுத்தது எதற்காக என்பது தொடர்பாக கனடா நாடு விளக்க கடமைப்பட்டுள்ளது. பிளம்பராக வேலை செய்து வந்தகொல்லப்பட்ட நிஜார் ஒன்றும் சுத்தமான மனிதரல்ல் அவரது கரங்கள் ரத்தக் கறை படிந்தவை. போலி பாஸ்போர்ட் மூலம் கனடாவுக்கு வந்தவர்தான் நிஜார். இவ்வாறு மைக்கேல் ரூபின் கூறியுள்ளார்.

காலிஸ்தான் விவகாரத்தில் இந்தியாவுக்கு ஆதரவாக அமெரிக்க முன்னாள் அதிகாரி ஒருவர் பேசியுள்ளது கனடாவுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## எட்கா உடன்படிக்கை மீண்டும் இந்தியாவுடன் பேச்சுகளை ஆரம்பித்துள்ளது இலங்கை அரசு

கொழும்பு, செப். 25

**இந்தியா மற்றும் இலங்கை இடையே பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் குறித்த பேச்சுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று செய்திகள் வெளியாகியுள்ளன.**

எட்கா உடன்படிக்கை தொடர்பில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இதுவரை 11 சுற்றுப் பேச்சுகள் நடைபெற்றுள்ளன. இலங்கை மற்றும் இந்தியாவின் பிரிதிநிதிகள் குழு எட்கா உடன்படிக்கை தொடர்பில் கடந்த 19ஆம் திகதி மெய்நிகர் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இந்திய பயணத்தின் பின்னர் இந்தியாவுடனான புதிய உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதில் அரசாங்கம் தீவிரம் காட்டி வருகிறது.

அதன் தொடர்ச்சியாகவே எட்கா உடன்படிக்கை தொடர்பிலான மெய்நிகர் வழியில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. (அ)

## ஐஸ் போதைப் பொருளை பொதியிட்ட நால்வர் கைது

கொழும்பு, செப். 25

ஆடைத் தொழிற்சாலையின் விடுதியில் ஐஸ் போதைப்பொருளை பொதி செய்துகொண்டிருந்த நால்வர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளதாக கம்பஹா - ஹோமாகம தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

டுபாயில் இருந்து இலங்கையின் பாதாள உலக செயல்பாடுகளை நடத்தி வருவதாக கூறப்படும் ‘ஹந்தயா’வின் மைத்துனர் என கூறப்படும் ‘சுக்கா’ என்ற நபர் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

தங்கும் விடுதியில் தராசுகள், பொலித்தீன் பைக்கெற்றுக்கள், மெழுகு விளக்குகள், கத்தரிக்கோல் மற்றும் போதைப்பொருட்களை பொதி செய்வதற்கு பயன்படுத்தப்படும் பல பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர்கள் ஹோமாகம நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (அ)

## கணவனை குத்திக் கொன்ற சந்தேகத்தில் மனைவி கைது!

நுவரெலியா, செப். 25

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 28 பீ விஜிதபுர பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக் கிழமை இரவு கத்திக்குத்துக்கு இலக்கான ஆண் ஒருவர் உயிரிழந்தார் நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

விஜிதபுர மார்காஸ்தோட்ட கிராமத்தில் தனது வீட்டில் வைத்து கணவன் மனைவிக்கு இடையே நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறிய நிலையில், மனைவி கணவனை கத்தியால் குத்தியதில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

விஜிதபுர மார்காஸ் தோட்ட பகுதியை சேர்ந்த 33 வயதுடைய பகீதரன் சந்திரசேகரன் என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தார்.

சந்தேக நபரான மனைவி பாத்திமா ரிஸ்வானாவை கைது செய்த நுவரெலியா பொலிஸார் இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## இரட்டை குழந்தைகள் உயிரிழப்பு; வைத்தியசாலை மீது குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 25

களுபோவில போதனா வைத்தியசாலையின் சிசு பிரிவில் சிகிச்சை பெற்று வந்த இரட்டைக் குழந்தைகள் உயிரிழந்தமை தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்தின் மீது பெற்றோர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கடந்த 9 ஆம் திகதி பிறந்த இரண்டு குழந்தைகளில் ஒன்று கடந்த 18ஆம் திகதி இறந்ததாக அறிவித்துள்ளனர். நேற்று முன்தினம் அதிகாலை மற்றைய குழந்தையும் உயிரிழந்தது.

கடந்த 18 ஆம் திகதி உயிரிழந்த குழந்தையின் மரணத்துக்கு சுவாசக்கோளாறே காரணம் என வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளபோதிலும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என பெற்றோர் குறிப்பிட்டனர்.

இது தொடர்பில் வைத்தியசாலை பணிப்பாளருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் களுபோவில போதனா வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் மருத்துவர் நிரஞ்சன் பாலகிருஷ்ணனிடம் வினவியபோது,

இந்த விடயம் தொடர்பில் குழந்தையின் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ள நிலையில், அதனை சுகாதார பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பி வைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

## சிசுக்களை விற்பனை செய்துவந்த மருத்துவமனை ஊழியர் சிக்கினார்

கண்டி மருத்துவமனையில் பணிபுரியும் சிற்றூழியர் ஒருவர் பணத்துக்காக சிசுக்களை விற்பனை செய்து வந்துள்ளார் என்று நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் கண்டு பிடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் நாவுல பொலிஸாருடன் இணைந்து கடந்த வெள்ளிக்கிழமை நடந்த சுற்றிவளைப்பின் போது வைத்தியசாலையில் பணிபுரியும் ஒருவரின் வீட்டில் இரண்டு மாத கைக்குழந்தைகள் இரண்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காலி மற்றும் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இரு குடும்பங்களுக்கு இந்த இரண்டு சிசுக்களும் விற்பனைக்காக மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்று விசாரணையில் தெரிய வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கண்டி நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் நீதிமன்ற உத்தரவை பெற்று இரண்டு சிசுக்களையும் சிறுவர் இல்லத்தில் ஒப்படைத்ததாகவும் இந்த குழந்தைகளின் தாய் ஒருவர் தெல்தெனிய பிரதேசத்திலும் மற்றையவர் நிகவெரட்டியிலும் வசிக்கின்றனர் என்றும் அறிய வந்துள்ளது. (ஐ)

## இராஜாங்க அமைச்சரின் மாமனார் சுட்டுக்கொலை!

கொழும்பு, செப். 25

காலி - டிக்சன் வீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் உயிரிழந்த வர்த்தகர், மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் டீ. வீ. சானகவின் மாமனார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காலியில் அடையாளம் தெரியாத நபர்களினால் நேற்றுமுன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் வர்த்தகர் ஒருவர் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இந்த துப்பாக்கி பிரயோகத்தை நடத்தியுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படாத நிலையில், சம்பவம் தொடர்பான விசாரணைகளை காலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பெண் மீது தாக்குதல் ஐந்து பேர் கைதாகினர்

கொழும்பு, செப். 25

பெண் ஒருவரை கொடூரமாக தாக்கியமைக்காக பொரளையில் உள்ள முன்னணி பல்பொருள் அங்காடி விற்பனை நிலையத்தின் பணியாளர்கள் ஐந்து பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பெண் ஒருவரை பல்பொருள் அங்காடி ஊழியர்கள் தாக்கும் காணொளி சமூக வலைதளத்தில் வெளியானது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தினர்.

ஹன்வெல்ல பிரதேசத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளன முதலில் தெரிவிக்கப்பட்டது. எனினும் பொரளையில் உள்ள விற்பனை நிலையமொன்றில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பின்னர் தெரியவந்துள்ளது.

விற்பனை நிலையத்திலிருந்து பல ஆண் மற்றும் பெண் ஊழியர்கள் வாடிக்கையாளரை கொடூரமாக தாக்குவது சி. சி. ரீ. வி. காட்சிகளில் பதிவாகியுள்ளது.

இந்த சம்பவம் செப்ரெம்பர் 18 ஆம் திகதி நடந்ததாக கூறப்படுகிறது. இருப்பினும், சமூக ஊடகங்களில் காணொளி வைரலாகும் வரை எந்த புகாரும் பதிவு செய்யப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் பொரளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பல்பொருள் அங்காடி நிர்வாகமும் முன்னதாக ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டது. (ஐ)

## உள்ளூராட்சி வேட்புமனுக்கள் இரத்தானால் 100 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட வாய்ப்பு!

கொழும்பு, செப். 25

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கான அண்மைய தீர்மானமானது 100 கோடி ரூபாய்க்கும் அதிகமான நிதி இழப்புக்கு வழிவகுக்கும் என சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கை (பவ்ரல்) தெரிவித்துள்ளது.

குறிப்பாக நாட்டின் பொருளாதார நெருக்கடியின் பின்னணியில் அரசாங்கத்தின் இந்த முடிவு குறித்து பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி கவலை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறான தீர்மானத்தால் ஏற்பட்ட நிதி இழப்புக்கு யார் பொறுப்புக் கூறுவது என ஹெட்டியாராச்சி கேள்வி எழுப்பியுள்ளார். தற்போதைய சூழ்நிலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார் .

மேலும், 2023 உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தயாரிப்பில் இலங்கை தேர்தல் ஆணையம் ஏற்கனவே கணிசமான தொகையை முதலீடு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர் வேட்புமனுக்கள் ரத்து செய்யப்படுவதால், வருவாய் இழப்பு ஏற்படுவது மட்டுமல்லாமல், தேர்தலுக்காக ஏற்கனவே, ஒதுக்கப்பட்ட ஆதாரங்களும் வீணடிக்கப்படுகின்றன என தெரிவித்துள்ளார் .

வேட்புமனுக்களை இரத்து செய்வதற்கான தீர்மானம் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான அமைச்சர்கள் ஆலோசனைக் குழுவில் செப்ரெம்பர் 20 ஆம் திகதி ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. (ஐ)

## பருவகால சீட்டுகளை இரத்து செய்வதற்கு முடிவு

கொழும்பு, செப். 25

எதிர்காலத்தில் ரயில் பருவகால சீட்டை (சீசன் ரிக்கெற்) இரத்துச் செய்வதுடன் அனைத்து கட்டணங்களையும் உயர்த்த போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

ரயில்வே திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றியதன் பின்னர், இது நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ரயில்வே திணைக்கள பிரதானிகள் மற்றும் தொழிற்சங்கங்களுக்கு இடையிலான கலந்துரையாடல் ஒன்று போக்குவரத்து அமைச்சில் அண்மையில் இடம் பெற்றபோதே, அமைச்சு இதனை வெளிப்படுத்தியுள்ளது.

இதன்படி, ரயில் பருவகால சீட்டுகளை இரத்துச் செய்வதன் மூலம் அதிகார சபை பெருமளவு இலாபத்தை பெற முடியும் என போக்குவரத்து அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

## கிணற்றிலிருந்து...

துரைராசா (வயது 51) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இறந்த நபர், நேற்று முன்தினம் வீட்டில் இருந்து புறப்பட்ட நிலையில் வீடு திரும்பவில்லை. இந்நிலையில் அவரை தேடிச் சென்றபோது, நேற்று காலை தோட்டக் கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். இவர் மது போதையில் கிணற்றில் தவறி விழுந்திருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

சடலம் யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. இது குறித்த மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ஐ)

## நால்வர்...

கடன்களினால் இவர்கள் கடனாளிகளாக மாறியுள்ளதாக பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்தார்.

இதன்படி, இந்த ஆண்டு ஏப்ரல் வரை தனிநபர் கடன் தொகை 11 இலட் சத்து 18 ஆயிரம் ரூபாய் என்றும் தெரிவித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டில் தனி நபர் கடன் 6 இலட்சத்து 90ஆயிரம் ரூபாயாக இருந்தது. இந்த ஆண்டு தனிநபர் உள்நாட்டு கடன் தொகை 6 இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரம் ரூபா என்றும், வெளிநாட்டு கடன் தொகை 4 இலட்சத்து 90 ஆயிரத்து 720 ரூபாய் - என்றார். (ஐ)

## ஐ.நா.மனித...

நிராகரித்து புலனாய்வு பிரிவு பணிப்பாளர் சுரேஷ் சாலே ஐக்கிய இராச்சியத்தின் ஒளிபரப்பு ஒழுங்கு படுத்தல் ஆணைக்குழுவுக்கு (ஒவ்கொம்) அனுப்பிவைத்த முறைப்பாட்டை அந்த ஆணைக்குழு நிராகரித்துள்ளது என்றும் அறிய வருகின்றது.

இதேவேளை, சனல் 4 இன் ஆவணப் படம் தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு லண்டனில் உள்ள இலங்கை தூதரகத்துக்கு நேரடியாக விடுக்கப்பட்ட வேண்டு கோள்களும் பிரச்னையில் உள்ளன. இவ்வாறான சட்ட நடவடிக்கையில் தனியார் சட்ட அமைப்பு ஒன்றை ஈடுபடுத்தினால் அதற்காக 50 இலட்சம் ஸ்ரேலிங் பவுண்ஸ் செலவாகலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

## இலங்கை...

முறை அறிக்கை மென்போக்கை கடைப்பிடித்திருப்பதுபோல் தெரிகிறது.

அதுமாத்திரமன்றி பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானத்தை முன்மொழிந்த இணையனுசரணை நாடுகளுக்குத் தலைமைதாங்கும் பிரிட்டன் இவ்விடயத்தில் அக்கறை காண்பிக்க வேண்டும். இலங்கை அரசாங்கத்தின் மீது வலுவான அழுத்தத்தை பிரயோகிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் - என்று கஜேந்திரகுமார் கூறினார்.

இதற்கு பதிலளித்த தொழில் கட்சி உறுப்பினர்கள், இவ்விடயத்தைப் பொறுத்தமட்டில் தற்போதைய பூகோள அரசியல் நிலைமைகளையும் உள்ளக நிலவரத்தையும் நன்கு ஆராய்ந்து பார்த்து எந்தவொரு தரப்பினருக்கும் பாதிப்பு ஏற்படாதவாறான பொது நிலைப்பாட்டின் அடிப்படையிலான பொறிமுறையொன்றை முன்மொழிவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கஜேந்திரகுமாருக்குக் கூறினர்.

இதேவேளை, இன்று திங்கட்கிழமை முதல் அங்கு முக்கிய நிகழ்வுகளிலும் உயர்மட்ட சந்திப்புக்களிலும் பங்கேற்கவுள்ளார். குறிப்பாக, ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது கூட்டத் தொடரின் இலங்கை தொடர்பான பக்க நிகழ்வுகளில் அவர் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ)

# திருகோணமலையில் மீன்பிடி தடை முடிவை ஆளுநர் பரிசீலிக்க வேண்டும்!

**இம்ரான் மஹரூப் எம். பி.**

கொழும்பு, செப். 25

கிழக்கு மாகாண ஆளுநர் திருகோணமலை மாவட்ட மீன்பிடி தடை குறித்து எடுத்த ஒருதலைபட்சமான முடிவு இம்மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து ஆளுநருடன் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாக திருகோணமலை மாவட்ட மீனவ குழுக்களுக்கிடையில் நிலவும் முறுகல் நிலை தொடர்பாகவும், அது குறித்து ஆளுநர் எடுத்த தீர்மானம் குறித்தும் கருத்து வெளியிடும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

சுருக்குவலையை பொறுத்தவரையில் அனுமதிக்கப்பட்ட சுருக்கு வலை, அனுமதிக்கப்படாத சுருக்கு வலை என இரண்டு வகையான சுருக்கு வலைகள் உள்ளன. இது தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் உள்ளது. இதில் சட்ட ரீதியாக அனுமதிப்பத்திரம் வழங்கப் பட்ட சுருக்கு வலை மூலம் கிண்ணியா, மூதூர், திருகோணமலை, நிலாவெளி, இறக்கக்கண்டி, குச்சவெளி, புடவைக் கட்டு, புல்மோட்டை, வெருகல் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

எனினும், அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட சுருக்கு வலைக்கும் அனுமதிப் பத்திரம் வழங்க முடியாத சுருக்கு வலைக்கும் வித்தியாசம் அறியாமல் ஆளுநர் தற்போது சுருக்கு வலை என்பது சட்ட விரோதமான ஒன்று என்ற நோக்கில் எடுத்த ஒருதலைபட்ச முடிவு திருகோணமலை மாவட்ட சிறுபான்மை மீனவ சமூகத்தின் வாழ்வாதாரத்தை இல்லாமலாக்கும் முயற்சியாக உள்ளது.

இங்கு இரண்டு மீனவக் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட தொழில் போட்டி காரணமாகவே முறுகல் நிலை ஏற்பட்டது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் இரண்டு குழுக்களையும் அழைத்து இரு பக்க நியாயங்களையும் கேட்ட பின்பே தீர்மானத்துக்கு வர வேண்டும்.

ஆனால், கிழக்கு மாகாண ஆளுநர் இதில் ஒரு குழுவினரின் கருத்தைக் கேட்டே இந்த மீன்பிடி தடை தீர்மானத்துக்கு வந்துள்ளார். இது குறித்து அவரை நேரில் சந்தித்து விடயத்தை தெளிவு படுத்த (வியாழக்கிழமை) பல தடவை முயற்சித்த போதும் அவரைச் சந்திக்க முடியாத நிலை ஏற்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தைப் பொருத்தவரை மீன் நுகர்வில் 50 வீதத்துக்கு அதிகமானவை சுருக்கு வலை மூலமே பூர்த்தி செய்யப்படுகிறது. சாதாரண மீனவக் குடும்பங்கள் இந்தத் தொழிலிலேயே தங்கியுள்ளன.

எனவே, இந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு கிழக்கு மாகாண ஆளுநர் இரண்டு தரப்பு நியாயங்களையும் கேட்டறிந்து பூரண தகவல்களை பெற்ற பின்னர், நடவடிக்கைகளை முன்னெடுப்பதே நியாயமானதாக இருக்கும்.

ஆளுநரின் இந்த நடவடிக்கை இம் மீனவக் குடும்பங்களின் அத்தியாவசியத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, இது குறித்து ஆளுநர் மீள் பரிசீலனை செய்து, உடனே நியாயமான தீர்மானத்துக்கு வர வேண்டும். இன்றேல், எதிர்காலத்தில் பெரும் மக்கள் எதிர்ப்பு ஒன்றை சந்திக்க நேரிடும் - என்றார். (ஐ)

## மக்கள் குரலையும்...

ஜனாதிபதியாலே, தாம் கூறும்படி செயல்படாவிட்டால், அந்த உறுப்பினர்கள் நீக்கப்படலாம். தமக்கு நட்பாக செயல்படும் அடியாட்களை நியமித்து தனது பதவிக்கும், தனக்கும், தனக்கு நெருக்கமானவர்களுக்கும் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மாத்தறை மாவட்ட உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள், மகளிர் பிரதிநிதிகள் மற்றும் வேட்பாளர்களுடன் நேற்று முன்தினம் நடந்த சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

இந்த சட்ட மூலத்துக்கு ஏமாந்து விடக்கூடாது என்றும், ஒளிபரப்பு அதிகார சபை சட்டம் குறித்து கனம் நீதிமன்றம்கூட கட்டுப்பாட்டு ஒழுங்கு முறை தேவை என்றாலும், அதைச் செய்வதற்கான அதிகாரம் நிறைவேற்று அதிகாரத்துக்கு இல்லை என்றே கூறியதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகள் வழங்கிய முந்தைய தீர்ப்புகளுக்கு முரணாக தற்போதைய அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள ஊடக அடக்குமுறை சட்டத்திற்கு எந்த செல்லுபடி தன்மையும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியால் நியமிக்கப்படும் இந்த ஆணைக்குழு நீதிமன்றத்தின் அதிகாரத்தைக்கூட மிஞ்சுவதாகவும், இது இந்நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும் என்றும், 23 கோடி ரூபாய் அதிகமான மக்கள்தொகை கொண்ட பாகிஸ்தானில் இதுபோன்ற சட்டத்தை அறிமுகப் படுத்த இம்ரான் கான் தயாராக இருந்தாலும் இணைய சேவை வழங்குநர்கள் நாட்டை விட்டு வெளியேற எடுத்த தீர்மானங்களால் அவர் அதை வாபஸ் பெற நேரிட்டது.

இந்த சட்டத்தில் 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கும் அதிகாரம் உள்ளதால் இணையதள மையங்கள் நாட்டை விட்டு வெளியேறும் அபாயம் உள்ளதாகவும், முகநூல், டுவிற்றர், இன்ஸ்ட்ராகிராம், கூகுள் போன்ற நிறுவனங்கள்கூட இதன் ஆபத்துக்கள் குறித்து எச்சரித்துள்ளன. தற்போதைய அரசாங்கம் டிஜிற்றல் பொருளாதாரத்தை கொண்டு வருகிறோம் என்று தம்பட்டம் அடித்துக்கொண்டு இணையத்தையும் சமூக ஊடகங்களையும் கட்டுப்படுத்த முயல்கிறது என்றும், ஜனாதிபதி பட்டம், பதவியையும் பாதுகாக்கவே இவை அனைத்தும் செய்யப்படுகின்றன. தங்களுக்குப் பிடிக்காத கருத்துகளை முற்றாக ஒதுக்கி விட்டு அரச பயங்கரவாதத்தின் ஊடாக ஊடகங்களை ஒடுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இவ்வாறான சட்டங்களால் எந்த புதிய தொழில்நுட்பமும் நம் நாட்டுக்குள் வராது. அந்நிய நேரடி முதலீடு கூட இழக்கப்படும். இந்தச் சட்டத்தின் மிகத் தெளிவான நோக்கம் மக்களின் குரலை அடக்கி ஜனநாயக உரிமையை அழிப்பதாகும். பல்வேறு மாற்றுக் கருத்துகளை அடக்கி ஒடுக்குகிறது. அரசாங்கத்துக்கு எதிராக கருத்து தெரிவிப்பவர்களை தண்டிக்கவும், கருத்து சுதந்திரம்,சிந்தனை சுதந்திரம், ஒன்று கூடும் சுதந்திரம் ஆகியவை இல்லாதொழிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இது போன்ற சட்ட மூலங்களை கொண்டுவந்தால், ஐக்கிய மக்கள் சக்தி நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தும் என்றும், இந்த ஊடக அடக்குமுறைக் கொள்கையை முறியடிக்க வீதியில் இறங்கி போராடும் என்றும் அவர் தெரிவித்தார்.

## நிபா...

சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்த வைரஸ் நாட்டுக்குள் நுழைவதை தடுப்பதற்கு துறைமுகத்தில் அல்லது விமான நிலையத்தில் எந்த வகையிலும் பாதுகாப்பு நடைவடிக்கைகளும் எடுக்கவில்லை.

இந்தியாவில் இருந்து சட்ட விரோதமான முறையில் பலர் நாட்டுக்குள் வந்திருக்கலாம்.

கடற்றொழிலில் ஈடுபடும் பிரஜைகளுடன் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்கின்றார்கள், பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்கின்றார்கள், போதை பொருள் பரிமாற்றம் மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் இதுவரையில் நாட்டிற்குள் நிபா வைரஸ் நுழைந்திருக்கலாம், நுழையும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. வைரஸ் நாட்டில் இல்லை என யாரும் நினைக்க வேண்டாம். ஏற்கனவே பரவியிருப்பதற்கும் வாய்ப்புகள் அதிகளவில் உள்ளன.

நிபா வைரஸ் நாட்டுக்குள் நுழைவதைத் தடுப்பதற்கு பரிசோதனை முறையை வலுப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## பால்...

யாழ். போதனா மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் நடத்தினார். பால் புரையேறியே குழந்தை இறந்ததாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இடைக்கால...

650 டொலர் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 28 கோடியே 38 இலட்சத்து 99 ஆயிரம் ரூபாய் இடைக்கால இழப்பீடாக கிடைத்துள்ளது.

எஞ்சிய ஒரு கோடியே 60 இலட்சம் டொலர் விரைவில் கிடைக்கப்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த இழப்பீட்டுத் தொகையானது கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் செலவுகளுக்காகக் கிடைக்கப்பெற்றுள்ளது.

கப்பல் நிறுவனத்துக்கான காப்புறுதி நிறுவனத்துடன், அண்மையில் எட்டிய இணக்கப்பாட்டுக்கு அமைய குறித்த இடைக்கால இழப்பீட்டுத் தொகை இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே, மீனவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்காகவும் இழப்பீடு கோரப்பட்டுள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் குறித்த காப்புறுதி நிறுவனம் ஆராய்ந்து வருவதாக சட்ட மா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் கடந்த 2021 மே 2ஆம் திகதி இலங்கை கடல் எல்லையில் தீ பற்றி எரிந்தது. இதனால் கடல் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்பட்டதுடன் மீனவர்களின் தொழிலுக்கும் பாதிப்பு ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு Eelanadu

# ஒரு இறாத்தல் பாணின் விலையை ரூ. 100ஆக குறைக்க நடவடிக்கை!

கொழும்பு, செப். 25

ஒரு இறாத்தல் பாணின் விலை 100 ரூபாயாக குறைக்க எதிர்பார்க்கப்படுவதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

பல்வேறு வகையான வரிகள் மற்றும் டொலரின் பெறுமதி காரணமாக பேக்கரி பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன என்று அதன் தலைவர் என். கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார். ஒரு இறாத்தல் பாணின் விலையை 100 ரூபாய் அல்லது அதற்கும் குறைவாகவே பேணுவதே தமது சங்கத்தின் ஒரே எதிர்பார்ப்பு என என். கே. ஜெயவர்த்தன கூறியுள்ளார்.

அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் முயற்சியின் கீழ் அரசாங்கத்துடன் பேச்சு நடத்தி சுமார் 100 ரூபாய்க்கு 450 கிராம் பாணை வழங்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அரசு தலையிட்டால், 100 ரூபாய்க்கு ஒரு இறாத்தல் பாணை வழங்குவது சாத்தியமாகும் என்றும் அவர் கூறினார். (ஐ)

# கொடிகாமத்தில் இருந்து திலீபன் நினைவூர்தி ஆரம்பம்!



யாழ்ப்பாணம், செப். 25

தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் தியாக தீபம் திலீபனின் நினைவு ஊர்தி பவனி கொடிகாமத்தில் இருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது.

வடக்கு முழுவதும் செல்லவுள்ள எழுச்சி ஊர்தி பவனி கொடிகாமத்திலிருந்து சாவகச்சேரி, பூநகரி, முழங்காவில், மன்னார், வவுனியா ஊடாக பயணித்து கிளிநொச்சியை வந்தடைந்து திலீபன் உயிர்த் தியாகம் செய்த நாளில் - நாளை செவ்வாய்க்கிழமை நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைவிடத்தை வந்தடையவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சுகாதார அமைச்சராக ரமேஷ்? பதவிகளில் விரைவில் மாற்றம்!

கொழும்பு, செப். 25

சுகாதார அமைச்சராக ரமேஷ் பத்திரனவை நியமிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்தாக அறிய வருகிறது. எனினும், அவர் இதற்கு தனது விருப்பத்தை தெரிவிக்கவில்லை என கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், நான்கு அமைச்சர்களின் அமைச்சுப் பதவிகளை மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு அல்லது மூன்று அமைச்சரவை பதவிகள் ஒதுக்கப்பட்டுள்ள அமைச்சர்களிடமிருந்து சில அமைச்சுக்களை மற்றவர்களுக்கு ஒதுக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகிறது. (ஐ)

# போதையிலிருந்தவர் தடுமாறி வீழ்ந்து பலி!

நுவரெலியா, செப். 25

நுவரெலியாவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டடம் ஒன்றில் தொழில் புரிந்து வந்த இரத்தினபுரி - மஹவலவத்த கீழ் பிரிவைச் சேர்ந்த சுப்பிரமணியம் வடிவேலு (வயது 59) கட்டடத்தின் முதலாவது மாடியிலிருந்து சனிக்கிழமை கீழே விழுந்து உயிரிழந்தார்.

அன்றையதினம் இரவு அவர் மதுபோதையில் இருந்தார் என்றும், அவர் தங்கியிருந்த இடத்தில் இவரை இரவு முழுவதும் காணவில்லை எனவும் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் தேடிப்பார்த்த போது இறந்த நிலையில் கிடந்ததாக சக தொழிலாளர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக நுவரெலியா பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# 957 மருத்துவர்கள் சேவையிலிருந்து இந்த ஆண்டில் விலகியுள்ளனர்!

கொழும்பு, செப். 25

**இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 957 மருத்துவர்கள் சேவையிலிருந்து விலகியுள்ளனர் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

கோபா குழுவில் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5 வருட கடமை விடுப்பு பெற்று வெளிநாடு செல்வதற்காகவே பெரும்பாலான மருத்துவர்கள் சேவையில் இருந்து விலகியுள்ளனர் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வித முன்னறிவிப்பும் இன்றி பதவி விலகிய மருத்துவர்கள் பலர் இருக்கின்றனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டை விட்டு வெளியேறும் மருத்துவர்கள் தொடர்பில் எதிர்வரும் திங்கட்கிழமை சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார். (ஐ)

# இரட்டை குழந்தைகள் உயிரிழப்பு விசாரணைக்கு குழு அமைக்கப்படும்!

கொழும்பு, செப். 25

களுபோவில போதனா மருத்துவமனையில் பிரசவிக்கப்பட்ட இரட்டை குழந்தைகள் உயிரிழந்தமை தொடர்பில் விசாரணை செய்யக் குழு ஒன்று நியமிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மருத்துவமனை ஊழியர்களின் அலட்சியமே காரணம் என குழந்தைகளின் பெற்றோர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கடந்த 8ஆம் திகதி இந்த இரட்டை குழந்தைகள் பிறந்தன. இதில் ஒரு குழந்தை கடந்த 19ஆம் திகதியும் மற்றொரு குழந்தை மறுநாளும் உயிரிழந்தன.

இதனையடுத்து, இந்தச் சம்பவங்கள் தொடர்பாக குழந்தைகளின் பெற்றோர் கொஹுவல பொலிஸில் முறைப்பாடும் செய்துள்ளனர்.

இது தொடர்பில் களுபோவில போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் சாகரி கிரிவந்தெனிய தெரிவிக்கையில், சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் பணிப்புரையின் பிரகாரம், இது தொடர்பில் ஆராய குழுவொன்று நியமிக்கப்படும் - என்றார். (ஐ)

# கட்டட நிர்மாணத் துறையினரின் நிதி பிரச்னைக்கு விரைவில் தீர்வு

கொழும்பு, செப். 25

கட்டட நிர்மாண துறையில் ஈடுபட்டுள்ளோர் நீண்ட காலமாக எதிர்கொண்டிருந்த நிதி பிரச்னைக்கு அடுத்த ஆண்டு ஆரம்பம் முதல் தீர்வு ஏற்படும் என இலங்கை நிர்மாண அமைப்பின் தலைவர் ரொஹான் கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்ட பெரும் பொருளாதார பின்னடைவை அடுத்து இடைநிறுத்தப்பட்ட நிர்மாண பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு அமைய நாடளாவிய ரீதியாக தடைப்பட்டிருந்த நிர்மாணப் பணி திட்டங்களில் 40 முதல் 60 சதவீதமானவை ஆரம்பக்கப்படவுள்ளன.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், இலங்கை நிர்மாணத்துறை அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட “நிர்மாண எக்ஸ்போ 2024” என்ற கருத்தரங்கில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்த அமைப்பின் உறுப்பினர் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்காக வழங்கப்பட வேண்டியிருந்த 24 ஆயிரம் கோடி ரூபாயில் தற்போது, 6 ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே நிலுவையில் உள்ளது.

தற்போது, ஏராளமானவர்கள் பல திட்டங்களை மேற்கொள்வதற்காக இலங்கை முதலீட்டு சபையின் அனுமதியைக் கோரியுள்ளனர். இது தவிர, ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் மேற்கொள்ளப்படும் நிர்மாண பணிகளுக்கான செலவீனம் அதிகம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்தியா, மலேசியா, வியட்நாம், தாய்லாந்து, பங்களாதேஷ் உட்பட பல அயல் நாடுகளின் நிர்மாண செலவீனம் குறைவானதாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதில் தயக்கம் காட்டுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையை சீர்செய்வதற்கான முயற்சிகளில் தமது அமைப்பு அதிக கவனத்தை செலுத்துவதாகவும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# தேசிய மீலாத்துன் நபி விழா பிற்போடப்பட்டுள்ளது!

## இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான்

மன்னார், செப். 25

தேசிய மீலாத்துன் நபி விழா எதிர்வரும் 28ஆம் திகதி நடக்கவிருந்தது. இந்நிலையில், அது பிற்போடப்பட்டுள்ளது. ஜனாதிபதி நாட்டில் இருக்க மாட்டார் என்பதனாலேயே இந்த நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது. ஜனாதிபதி இதில் கட்டாயம் கலந்துகொள்ள இருப்பதால் அவர் திகதியை குறிப்பிட்ட பின்னர் நிகழ்வு திகதி குறித்து அறிவிக்கப்படும் என கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னாரில் தேசிய மீலாத்துன் நபி தின விழா இவ்வருடம் மன்னார் மாவட்டத்தில் முசலி செயலகப் பிரிவில் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது. இதற்கான ஆய்த்த முன்னேற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

இது தொடர்பான மீளாய்வுக் கூட்டம் வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தில் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் அவர்களின் பங்கேற்போடு நடைபெற்றது. இக்கூட்டத்தைத் தொடர்ந்து இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில்,

மன்னாரில் இந்த விழாவை மிகவும் சிறப்பாக நடாத்துவதற்கான ஏற்பாடாக இதன் ஏற்பாட்டுக் குழு மற்றும் இதன் சார்ந்த திணைக்கள அதிகாரிகளுடனும் கலந்துரையாடியுள்ளோம். கடந்த கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களில் இதன் செயல்பாடுகள் எவ்வாறு இருக்கின்றது என்பதை நாங்கள் ஆராய்ந்தோம்.

மாவட்ட மக்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகள் மிகவும் ஒத்துழைப்புடன் செயல்படுவதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம். மீலாத்துன் நபி விழா எதிர்வரும் 28ஆம் திகதி நடத்துவதற்கு ஏற்பாடாகியிருந்த போதும் அன்றைய தினம் ஜனாதிபதி நாட்டில் இருக்க மாட்டார் என்பதாலேயே இது பிற்போடப்பட்டுள்ளது.

ஒக்ரோபர் முதல் அல்லது இரண்டாம் வாரத்தில் இந்த விழாவை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். ஜனாதிபதி இதில் கட்டாயம் கலந்துகொள்ள இருப்பதால் அவர் திகதியை குறிப்பிட்ட பின்னர் இது அறிவிக்கப்படும் என்றார்.

நாட்டில் பொருளாதார கஷ்டம் இருக்கின்றபோதும் இவ்விழாவுக்காக ஒரு கோடியே 15 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் பல அமைப்புகள் மற்றும் திணைக்களங்களினூடாக பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம் - என்றும் கூறினார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




### உலகக் கிண்ணத் தொடர்:
## இலங்கை அணியிலிருந்து வனிந்து ஹசரங்க விலகல்

கொழும்பு, செப். 25

இலங்கை அணியின் பிரபல வீரர் வனிந்து ஹசரங்கா 48 ஒருநாள் போட்டிகளில் 832 ஓட்டங்களும் 67 விக்கெட்களும் எடுத்துள்ளார். முக்கிய சகலதுறை வீரரான இவர் ஆசிய கிண்ண போட்டியிலும் காயம் காரணமாக விளையாடாமல் இருந்தார் ஹசரங்கா.

இதற்கு முன்பாக லங்கா பிறீமியர் லீக்கில் அதிகபட்ச ஓட்டங்கள் எடுத்தவரும் அதிக விக்கெட்கள் எடுத்தவருமாக ஹசரங்க அசத்தினார். தசைப்பிடிப்பு காரணமாக ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டியிலிருந்து விலகியுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது. இருப்பினும் செப். 28ஆம் திகதி உலகக் கிண்ணப் போட்டி அணிக்கான கடைசி மாறுதல்களை அறிவிக்கலாம் என்பதால் இன்னும் 4 நாள்கள் இருக்கின்றன.

ஏற்கனவே மதீஷ தீக்ஷன ஆசிய கோப்பை போட்டியின்போது காயமடைந்தார். இருப்பினும் அவர் விரைவில் குணமடைவார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், ஹசரங்காவின் இழப்பு இலங்கை அணிக்கு பெரிய பின்னடைவாக இருக்குமென கிரிக்கெட் ரசிகர்களும் விமர்சகர்களும் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

அக். 5ஆம் திகதி ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டி தொடங்கவுள்ளது குறிப்பிடத்தக்கது. இலங்கை அணி முதல் போட்டி ஒக்ரோபர் 7ஆம் திகதி தென்னாபிரிக்காவுடன் மோதவுள்ளது.

## ஆஸியுடனான போட்டி இந்திய அணி வெற்றி!



மொஹாலி, செப். 25

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மொஹாலியில் சனிக்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 276 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அதிபட்சமாக டேவிட் வோர்ணர் 53 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 6 பௌண்ட்ரிகளுடன் 52 ஓட்டங்கள் எடுத்தார். ஜோஷ் இங்லிஸ் 45, ஸ்ரீவ் ஸ்மித் 41, மார்னஷ் லபுஷேன் 39, கமரூன் கிரீன் 31, மார்கஸ் ஸ்ரொய்னிஸ் 29, பட் கம்மின்ஸ் 21, மிட்செல் மார்ஷ் 4 ஓட்டங்கள் சேர்த்தனர்.

இந்திய அணி சார்பில் மொகமது ஷமி 5 விக்கெட்களை வீழ்த்தினார்.

277 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 48.4 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 281 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

தொடக்க வீரர்களான ருதுராஜ் கெய்க்வாட் 77 பந்துகளில், 10 பௌண்ட்ரிகளுடன் 71 ஓட்டங்களும், /ப்மன் கில் 63 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 6 பௌண்ட்ரிகளுடன் 74 ஓட்டங்களும், சூர்யகுமார் யாதவ் 49 பந்துகளில், 5 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 50 ஓட்டங்களும் விளாசி ஆட்டமிழந்தனர். ஸ்ரேயஸ் ஐயர் 3, இஷான் கிஷன் 18 ஓட்டங்களில் வெளியேறினர்.

அணித்தலைவர் கே.எல்.ராகுல் 63 பந்துகளில், 4 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 58 ஓட்டங்களும், ரவீந்திர ஜடேஜா 3 ஓட்டங்களும் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது.

### இருபது - 20 உலகக் கிண்ணம்
# போட்டி நடக்கும் இடங்களை அறிவித்தது கிரிக்கெட் சபை!

டுபாய், செப். 25

இருபது - 20 உலகக் கிண்ணத் தொடர் நடைபெறும் இடங்களை ஐ. சி. சி. அறிவித்துள்ளது.

ஒருநாள் கிரிக்கெட் உலகக் கிண்ணம் அடுத்த மாதம் தொடங்கவுள்ளது. இந்த நிலையில், இருபது -20 உலக கிண்ணத் தொடர் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ளது. அடுத்த ஆண்டு ஜூன் 4ஆம் திகதி முதல் 30ஆம் திகதி நடக்கவிருக்கும் இந்தத் தொடரை மேற்கிந்திய தீவுகள் மற்றும் அமெரிக்க ஆகிய நாடுகள் இணைந்து நடத்தவுள்ளன.

முதன்முறையாக இந்தத் தொடரில் 20 அணிகள் பங்கேற்று விளையாடவுள்ளன. இதனிடையே, இருபது -20 உலகக் கிண்ணத் தொடர் நடைபெறும் இடங்களை ஐ. சி. சி. அறிவித்துள்ளது.

இதன்படி, மேற்கிந்திய தீவுகளில் ஆன்டிகுவா-பார்புடா, பார்படாஸ், கயானா, சென். லூசியா, சென் வின்சென்ட், டிரினிடாட்-டுபாகோ ஆகிய மைதானங்கள்



போட்டிகள் நடத்த தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இதேபோன்று, அமெரிக்காவில் டல்லாஸ், புளோரிடா மற்றும் நியூயோர்க் ஆகிய இடங்கள் போட்டிகள் நடைபெறவுள்ளன. (ஐ)

# 19ஆவது ஆசிய விளையாட்டு கோலாகலமாக ஆரம்பமானது



ஹாங்சோ, செப். 23

19ஆவது ஆசிய விளையாட்டு போட்டி சீனாவின் ஹாங்சோ நகரில் உள்ள லோட்டஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் கோலாகலமாக தொடங்கியது.

செயற்கை நுண்ணறிவு மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில்நுட்பம் ஆகியவற்றின் கூறுகளை ஒருங்கிணைத்து கண்கவர் தொடக்க விழாவுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. சுமார் 2 மணி நேரம் நடைபெற்ற விழாவில் தொழில்நுட்பம், சீனாவின் கலாசார வரலாறு மற்றும் கண்டத்தின் ஒற்றுமையின் உணர்வு ஆகியவை பிரதிபலித்தன.

“ஆசியாவில் அலைகள் எழுச்சியடைகின்றன“ என்ற முக்கிய கருப்பொருளுக்கு ஏற்ப, தொடக்க விழாவில் புதிய சகாப்தத்தில் சீனா, ஆசியா மற்றும் உலகம் ஒன்றிணைவது, ஆசிய மக்களின் ஒற்றுமை, அன்பு ஆகியவை கண்கவர் நிகழ்ச்சிகள் மூலம் எடுத்துரைக்கப்பட்டன. தொடக்க விழா நிகழ்ச்சிகளை காண மைதானத்தில் சுமார் 80 ஆயிரம் பேர் திரண்டிருந்தனர்.

வண்ணமயமான நிகழ்ச்சிகள் முடிவடைந்ததும் விழா மேடையில் டிஜிற்றல் தொழில்நுட்பத்தில் போட்டிக்கான தீபம் ஏற்றபட்டது. தொடர்ந்து சீன அதிபர் ஜி பின்பிங், ஆசிய விளையாட்டு போட்டி தொடங்குவதாக முறைப்படி அறிவித்தார்.

19ஆவது ஆசிய விளையாட்டு போட்டியில் 45 நாடுகளைச் சேர்ந்த 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ளனர். வரும் ஒக். 8ஆம் திகதி வரை இந்தப் போட்டி நடைபெறவுள்ளது.

ஒலிம்பிக் போட்டிக்கு பிறகு ஆசிய விளையாட்டு பெரிய அளவிலான போட்டியாக திகழ்கிறது. 2018ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டு போடடியில் 11 ஆயிரம் வீரர், வீராங்கனைகள் பங்கேற்ற நிலையில் தற்போது 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஹாங்சோ ஆசிய விளையாட்டில் பங்கேற்றுள்ளனர்.

ஆசிய விளையாட்டு போட்டியில் 45 நாடுகளை சேர்ந்தவீரர், வீராங்கனைகள் 40 விளையாட்டுகளில் 61 பிரிவுகளில் 481 தங்கப் பதக்கங்களை வெல்ல கடுமையாக போராட உள்ளனர்.

(ஐ)

# உலகக் கிண்ணத் தொடர் வீசா சிக்கலில் பாக். அணி!

கராச்சி, செப். 25

உலகக் கிண்ணத் தொடருக்காக இந்தியா வருவதில் பாகிஸ்தான் அணிக்கு வீசா கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 தொடர் எதிர்வரும் ஒக்ராபர் 5 முதல் நவம்பர் 19ஆம் திகதி வரை இந்தியாவின் 10 நகரங்களில் நடைபெறவுள்ளது. போட்டியில் இலங்கை, இந்தியா, நடப்பு சம்பியன் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, வங்கதேசம், ஆப்கானிஸ்தான், நெதர்லாந்து ஆகிய 10 நாடுகள் பங்கேற்கின்றன.

இதன்படி, ஒக்ரோபர் 6ஆம் திகதி நடைபெறும் போட்டியில் நெதர்லாந்து அணியை பாகிஸ்தான் அணி எதிர்கொள்கிறது. இதன்பின் மிகுந்த எதிர்பார்ப்புக்கு உட்பட்ட இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டி, ஒக்ரோபர் 14ஆம் திகதி அகமதாபாத் நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெற இருக்கிறது.

இந்நிலையில் உலகக்கோப்பை தொடரில் இந்தியா வருவதற்கு பாகிஸ்தான் அணிக்கு வீசா கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்கும் மற்ற அணிகளுக்கு இந்தியா சார்பில் வீசா தரப்பட்ட நிலையில் பாகிஸ்தான் அணிக்கு மட்டும்



இன்னும் வீசா வழங்கப்படவில்லை என அந்நாட்டு கிரிக்கெட் சபை குற்றம்சாட்டியுள்ளது.

ஆனாலும், இந்தியா சார்பில் இன்னும் வீசா அனுமதி தரப்படவில்லை. இதையடுத்து ஐ. சி. சியில் பாகிஸ்தான் கிரிக்கெட் நிர்வாகம் வீசா தொடர்பாக முறையிட்டுள்ளது. வீசா தாமதம் ஆவதால் துபாய் முகாமை இரத்து செய்துவிட்டு அடுத்த வாரம் நேரடியாக இந்தியா வர தீர்மானித்திருப்பதாக ஐ. சி. சியிடம் தெரிவித்துள்ளது பாகிஸ்தான் அணி.

(ஐ)

# "காணாமல் போகும்" சீனாவின் உயர்மட்ட இராணுவ அதிகாரிகள்!

## ஷி ஜின்பிங்கின் பலவீனத்தை காட்டுகிறதா?

டெஸ்ஸா வாங்



கடந்த சில மாதங்களாக, சீன அதிபர் ஷி ஜின்பிங்கால் நம்பப்பட்டு ஆதரவளிக்கப்பட்ட பல உயர்மட்ட அதிகாரிகள் காணாமல் போயிருக்கின்றனர். இது, ஜின்பிங் 'அரசியல் தூய்மைப்படுத்தலில்" ஈடுபடுகிறாரா, குறிப்பாக ராணுவத்துடன் தொடர்புடையவர்களைக் குறிவைக்கிறாரா என்ற தீவிர ஊகங்களைத் தூண்டியுள்ளது.

சமீபத்தில் இதனால் பாதிக்கப்பட்டவர் பாதுகாப்பு மந்திரி லி ஷாங்ஃபு என்று தெரிகிறது. இவர் கடந்த சில வாரங்களாக பொது வெளியில் காணப்படவில்லை.

முதலில் அவர் வெளியே காணப்படாதது சந்தேகத்தைக் கிளப்பவில்லை என்றாலும், உயர்மட்ட அமெரிக்க ராஜதந்திரி ஒருவர் அதைச் சுட்டிக்காட்டிய போது அது தீவிரமாகப் பேசப்பட்டது.

சீனாவின் மக்கள் விடுதலை ராணுவத்திற்கு ஆயுதக் கொள்வனவுகளை மேற்பார்வையிட்ட ஜெனரல் லி, ராணுவ உபகரணங்களை வாங்கியது தொடர்பாக விசாரிக்கப்பட்டு வருவதாக ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் பின்னர் தெரிவித்தது.

**ராணுவ ஊழல் குறித்த ஆய்வுகள்**

அணு ஆயுத ஏவுகணைகளைக் கட்டுப்படுத்தும் ராணுவப் பிரிவான ராக்கெட் படையில் இருந்த இரண்டு உயர் அதிகாரிகள் மற்றும் ஒரு ராணுவ நீதிமன்ற நீதிபதி நீக்கப்பட்ட சில வாரங்களுக்குப் பிறகு ஜெனரல் லி 'காணாமல் போயிருக்கிறார்'.

ஆயுதப் படைகளைக் கட்டுப்படுத்தும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய ராணுவக் குழுவில் உள்ள சிலரும் விசாரிக்கப்படுவதாக இப்போது புதிய வதந்திகள் பரவி வருகின்றன.

'உடல்நலக் காரணங்கள்' என்பதைத் தவிர, இந்த நீக்குதல்களுக்கு அதிகாரப் பூர்வமான விளக்கம் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை. ஆகவே இந்த வெற்றிடத்தில், ஊகங்கள் பரவி வருகின்றன.

இது சீனாவின் மக்கள் விடுதலை ராணுவத்தில் உள்ள ஊழலை ஒழிக்கும் அதிகாரப்பூர்வமான முயற்சி என்பது முக்கிய ஊகமாக உள்ளது.

சீன ராணுவம் தீவிர எச்சரிக்கையுடன் உள்ளது. ஜூலையில் அது வழக்கத்திற்கு மாறான ஓர் அழைப்பை விடுத்தது.

அதாவது, கடந்த ஐந்து ஆண்டுகளில் நடந்த ஊழல்கள் குறித்த தகவல்களைத் தெரிவிக்கும்படி பொதுமக்களிடம் கேட்டது.

ஜின்பிங், ஏப்ரல் முதல் ஐந்து முறை நாடு முழுவதும் சுற்றி, ராணுவத் தளங்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**ஊழலைத் தடுப்பதில் உள்ள சிக்கல்கள்**

கடந்த 1970களில் சீனா அதன் பொருளாதாரத்தை தாராளமயமாக்கத் தொடங்கியதில் இருந்து ராணுவத்தில் ஊழல் நீண்ட காலமாக ஒரு பிரச்னையாக இருந்து வருகிறது, என சீன கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் ராணுவத்திற்கு இடையிலான உறவை ஆய்வு செய்யும் சிங்கப்பூரின் நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி அறிஞர் ஜேம்ஸ் சார் குறிப்பிட்டார்.

ஒவ்வோர் ஆண்டும் சீனா ஒரு டிரில்லியன் யுவானை ராணுவத்திற்காகச் செலவிடுகிறது. வெளிப்படைத்தன்மை இல்லாத இந்த நிலையை, சீனாவின் ஒற்றைக் கட்சி மையப்படுத்தப்பட்ட அமைப்பு மேலும் சிக்கலாக்குகிறது.

மற்ற நாடுகளின் ராணுவங்கள் பொது ஆய்வுக்கு உட்படுத்தப்படுவது போலல்லாமல், சீனாவின் ஆயுதப்படைகள் சீன கம்யூனிஸ்ட் கட்சியால் பிரத்தியேகமாக மேற்பார்வை செய்யப்படுகின்றன, என முனைவர் சார் சுட்டிக்காட்டினார்.

ஆயுதப் படைகளுக்குள் ஊழலைத் தணிப்பதிலும், அதன் நற்பெயரை ஓரளவிற்கு மீட்டெடுப்பதிலும் ஜின்பிங் சில வெற்றிகளைப் பெற்றிருந்தாலும், 'ஊழலை வேரறுப்பது கடினமானது, ஆனால் சாத்தியமானது', ஏனெனில் அதற்கு 'முறையான மறுவடிவமைப்புகள் தேவைப்படும்' என்கிறார் முனைவர் சார்.

வடிக்கைகளை எதிர்த்துப் போராட உதவுமாறு குடிமக்களை பகிரங்கமாக ஊக்குவித்தது.

ஜெனரல் லி காணாமல் போனது வெளியுறவு அமைச்சர் கின் கேங் காணாமல் போனதை ஒத்திருக்கிறது. ஜூலையில் அவர் நீக்கப்பட்டதும் ஊகங்கள் அதிவேகமாகப் பரவின. இந்த வாரம், வால் ஸ்ட்ரீட் ஜர்னல், திரு கின், திருமணத்தை மீறிய உறவு சம்பந்தமாக விசாரிக்கப்படுவதாகத் தெரிவித்தது. இந்த உறவின் மூலம் அமெரிக்காவில் அவ

ஒழிக்கும் அழுத்தத்தின் கீழ் ஜின்பிங் செயல்படுகிறார் என்ற ஊகமும் உள்ளது.

சீனாவின் அரசியல் அமைப்பின் கீழ், ஜின்பிங் சீனாவின் அதிபர் மட்டுமல்ல, ராணுவத்தின் உயர்மட்டத் தலைவராகவும் உள்ளார்.

**ஜின்பிங்கின் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள்**

ஒரு வகையில், காணாமல் போனவர்கள், ஜின்பிங் தலைமையின் உறுதியற்ற தன்மையின் அடையாளமாகப் பார்க்கப்படுகிறார்கள்.

அமைச்சர்கள் மட்டுமல்ல, மாநில கவுன்சிலர்களாகவும் உயர்ந்த பதவிகளை வகித்த ஜெனரல் லீ மற்றும் திரு கின் ஆகியோர் ஜின்பிங்குக்கு விருப்பமான வர்கள். எனவே அவர்களின் திடீர் வீழ்ச்சி, சீன அதிபர் அதிகாரிகளை சரியாகப் புரிந்து வைத்திருக்கவில்லை என்றும் பார்க்கப்படலாம். ஆனால் இது ஜின்பிங்கின் வலிமையாகவும் பார்க்கப்படலாம்.

காணாமல் போன சீன கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரியின் மகனான ஜின்பிங், ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளுக்குப் பெயர் போனவர். இது அவரது எதிரிகளை வேரறுக்கும் நோக்கில் அரசியல் சுத்திகரிப்புகளாகவும் செயல்படுகிறது என்று பார்வையாளர்கள் கூறுகின்றனர்.




'தனது அதிகாரத்திற்குக் கீழில்லாத ஒரு முறையான சட்ட அமைப்பை சீன கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கும் வரை, இத்தகைய சம்பவங்கள் நிகழும்," என்கிறார் அவர்.

**அமெரிக்க பெண்ணுடன் குழந்தை பெற்றுக்கொண்ட சீன அமைச்சர்**

அதிகாரிகள் காணாமல் போவது, ஏற்கெனவே அமெரிக்காவுடன் சிக்கலான உறவைக் கொண்டிருக்கும் சீன அரசாங்கத்தில் மேலும் ஒரு ஆழமான சிக்கலை உருவாக்கலாம்.

ஜூலை மாதம், உளவு பார்ப்பதற்கு எதிரான சட்டம் சீனாவில் நடைமுறைக்கு வந்தது. இது அதிகாரிகளுக்கு விசாரணைகளை நடத்துவதில் அதிகப்படியான அதிகாரத்தைக் கொடுத்தது. மேலும் சீனாவின் பாதுகாப்பு அமைச்சகம் உளவு நட

ருக்கு ஒரு குழந்தை பிறந்தது.

சீன விவகாரங்கள் வல்லுநரான பில் பிஷப் கூற்றின்படி, திருமணத்தை மீறிய உறவு என்பது சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மேல் மட்டங்களில் குற்றமாகக் கருதப்படாது என்கிறார்.

"ஆனால் வெளிநாட்டு உளவுத்துறை உறவுகளை வைத்திருப்பதாக சந்தேகிக்கப்படக்கூடிய ஒருவருடன் தொடர்பு வைத்திருப்பதும், சீனாவின் முக்கிய புவிசார் அரசியல் போட்டியாளரின் பாஸ்போர்ட்டை வைத்திருக்கும் ஒரு குழந்தையை உருவாக்குவதும், தீவிரமாக விசாரிக்கப்படும்," என்கிறார் அவர்.

கோவிட் பெருந்தொற்றுக்குப் பின் வீழ்ச்சியடைந்த பொருளாதாரம் மற்றும் வேலையில்லாத் திண்டாட்டத்துடன் சீனா போராடி வருவதால், ஊழலை

மாவோ சேதுங்கிற்கு பிறகு, ஜின்பிங் தான் இந்த ஒடுக்குமுறைகளை அதிகளவில் செயல்படுத்தியிருக்கிறார். 2013இல் அவர் பதவியேற்றதில் இருந்து கீழ்மட்ட மற்றும் உயர்மட்ட அதிகாரிகளைக் குறிவைத்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில், பல ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான பணியாளர்கள் குறிவைக்கப்பட்டிருக்கின்றனர்.

ஜின்பிங் ஆயுதப்படைகளையும் குறிவைத்து 2017இல் 100க்கும் மேற்பட்ட மூத்த அதிகாரிகளை நீக்கினார். அந்த நேரத்தில் மாநில செய்தி நிறுவனமான சின்ஹூவா ஒரு கட்டுரையில், இப்படியாக நீக்கப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை, "புதிய சீனாவை உருவாக்குவதற்காக போர்களில் கொல்லப்பட்ட தளபதிகளின் எண்ணிக்கையைவிட அதிகமாக உள்ளது," என்று கூறியது. ●

# கனடாவில் தமிழர்களின் நிலை என்ன?

## சீக்கியர்களுக்கு நிகராக முக்கியத்துவம் தரப்படுகிறதா?

ரஞ்சன் அருண் பிரசாத், ச. பிரசாந்த்



சீக்கியர் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை தொடர்பான பிரச்னையால், இந்தியா - கனடா இடையே பதற்றமான சூழ்நிலையும், மோதல் போக்கும் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது.

இரு நாடுகளும் வெளியுறவு கொள்கை தொடர்பாக சில முடிவுகளை அறிவித்துள்ளன.

இந்நிலையில், கனடாவில் சீக்கியர்களைப் போலவே கணிசமாக வாழும் இந்தியத் தமிழர்கள், மற்றும் இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கை முறையும், கனடா அரசியல், மற்றும் சமூகத்தில் அவர்களுக்கு உள்ள முக்கியத்துவத்தையும் பற்றி அறிந்துகொள்ள, கனடாவாழ் தமிழர்களிடம் பேசியபோது,



### தமிழர்கள் கனடாவில் எப்போது குடியேறினர்?

இந்தியா மற்றும் இலங்கையைப் பூர்வீகமாக கொண்ட தமிழர்கள், கனடாவில் 3 லட்சத்திற்கும் அதிகமானோர் வாழ்ந்து வருகின்றனர்.

கனடாவின் ஒன்டாரியோ மற்றும் பிரிட்டிஷ் கொலம்பியா ஆகிய மாகாணங்களிலேயே அதிகளவில் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். ஏனைய மாகாணங்களிலும் குறிப்பிடத்தக்களவு தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

1970-ஆம் ஆண்டு தொடங்கி 1980-ஆம் ஆண்டுக்குப் இடைப்பட்ட காலத்திலேயே கனடாவில் தமிழர்கள் குடியேற ஆரம்பித்துள்ளனர். ஈழத் தமிழர்களே கனடாவில் முதல் முதலில் குடியேற ஆரம்பித்ததாக மூத்த ஊடகவியலாளர் ரமணன் சந்திரசேகரமூர்த்தி தெரிவிக்கின்றார்.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போர், கனடா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளை நோக்கி பெருமளவான இலங்கைத் தமிழர்கள் செல்வதற்கு காரணமாக அமைந்திருந்தது.

### கனடாவில் தமிழர்களின் அரசியல் முக்கியத்துவம்

அரசியல் ரீதியில் பார்த்தால் கடந்த சில ஆண்டுகளில், கனடாவில் அரசியலை தீர்மானிக்கும் சக்திகளாக தமிழர்கள் மாறிவிட்டனர் என்று தான் சொல்ல வேண்டும். டொரோன்டோ, ஒன்ராறியோ, ஆல்பெர்டா போன்ற பல மாகாணங்களில் தமிழர்கள் கூட்டாக ஒரே பகுதியில் வசித்து வருவதுடன், அந்தப்பகுதிகளில் அரசியல் மட்டுமின்றி, அரசு இயந்திரத்திலும் தமிழர்கள் கோலோச்சி வருகின்றனர்.

கனடா மத்திய அரசாங்கத்தில் இரண்டு தமிழர்கள், முக்கிய இரண்டு அமைச்சு பதவிகளை வகித்து வருகின்றமையானது, கனடாவில் தமிழர்களின் ஆதிக்கத்திற்கு சிறந்த உதாரணமாக இருக்கும்.

இந்தியாவைப் பூர்வீகமாக கொண்ட அனிதா ஆனந்த் மற்றும் இலங்கையை பூர்வீகமாக கொண்ட ஹரி ஆனந்தசங்கரி ஆகியோரே இவ்வாறு கனடா மத்திய அரசாங்கத்தில் முக்கிய அமைச்சு பதவிகளை வகித்து வருகின்றனர். இவர்களுக்கு எல்லாம் முன்பு கனடாவின் முதல் மக்களவை உறுப்பினராக, ராதிகா சிட்சபேசன் தேர்வாகினார்.

அதேபோன்று, மாகாண மற்றும் நகர அரசியலிலும் இலங்கை மற்றும் இந்திய நாடுகளை பூர்வீகமாக கொண்ட தமிழர்கள், தமது பங்களிப்புக்களை வழங்கி வருகின்றனர்.

அத்துடன், "கனடாவில் வாழும் தமிழர்கள், அனைத்து துறைகளிலும் தமது பங்களிப்புக்களை வழங்கி வருவதை அவதானிக்க முடிகின்றது," என மூத்த ஊடகவியலாளர் ரமணன் சந்திரசேகரமூர்த்தி தெரிவிக்கின்றார்.

### கனடாவில் தமிழர்களின் எந்தெந்த துறைகளில் சாதித்திருக்கின்றனர்?

குறிப்பாக அரசியல், சுய தொழில், வர்த்தக நடவடிக்



கைகள், மருத்துவத் துறை, பொறியியலாளர்கள், கணக்காளர்கள் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் தமது ஆதிக்கத்தை தமிழர்கள் செலுத்தி வருகின்றனர்.

குறிப்பாக பாரிய இரும்பு உற்பத்தி தொழிற்சாலை உள்ளிட்ட பல்வேறு தொழில் வல்லுநர்களாகவும் தமிழர்கள் கனடாவில் திகழ்வதாக அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

கனடாவில் வாழும் ஏனைய சமூகங்களுக்கு நிகராக, இந்திய மற்றும் இலங்கையை பூர்வீகமாக கொண்ட தமிழர்களும் வாழ்ந்து வருவதாக சந்திரசேகரமூர்த்தி கூறுகின்றார்.

### தமிழர்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் கனடா அரசு

கனடாவின் வளர்ச்சியில் தவிர்க்க முடியாத சக்திகளாக உள்ள தமிழர்களுக்கு, கனடா அரசு அதீத முன்னுரிமை கொடுப்பதாகவும், தமிழரின் கலாசாரத்தை மேம்படுத்த கனடா அரசு பலவற்றை செய்துள்ளதாகவும் தெரிவிக்கிறார் ஊடகவியலாளர் ரமணன் சந்திசேகர மூர்த்தி. இதற்காக கனடா அரசின் மூன்று முக்கிய அறிவிப்புகளை சான்றாக முன்வைக்கிறார் அவர்.

இது குறித்து மேலும் விளக்கிய ரமணன் சந்திசேகர மூர்த்தி, "இலங்கையில் நடந்த தமிழர் இனப்படுகொலையை கனடாவிலுள்ள அனைத்து மக்களும் தெரிந்து கொள்வதற்காக, உலகின் முதல் நாடாக கனடாவின் ஒன்ராறியோ மாகாணம், மே 11 - 18ம் தேதி வரையில் இலங்கை தமிழர் இனப்படுகொலை வாரமாக கடைபிடிக்க மசோதா நிறைவேற்றி உத்தரவிட்டுள்ளது. இலங்கை அரசு இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த நிலையிலும், கனடா அரசு தமிழர்களுக்காக இதைச் செய்துள்ளது. இது தமிழர்களுக்கு கிடைத்த மாபெரும் வெற்றி.

மேலும், தமிழர்களின் பாரம்பரியம், பண்பாட்டை அனைத்து மக்களும் தெரிந்து கொள்ள ஜனவரி மாதத்தை, தமிழ் மரபுரிமை மாதம் - **Tamil Heritage Month** என, கனடா அரசு அறிவித்து பள்ளி, கல்லூரிகளிலும், குடியிருப்பு பகுதிகளிலும் கொண்டாட்டங்களையும் நடத்துகிறது. இதில், தமிழர்கள் பொங்கல் வைத்து கொண்டாடுவதுடன், தமிழரின் அனைத்து பாரம்பரிய மற்றும் கலாச்சாரமும் நினைவுகூறப்படுகிறது" என்றார்.

இந்தாண்டு நடந்த இந்த நிகழ்ச்சியில் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நேரில் பங்கேற்று தமிழரின் பாரம்பரியத்தை கொண்டாடியுள்ளார். இதிலிருந்தே கனடா அரசுக்கும் தமிழர்களுக்கு உள்ள பிணைப்பை தெரிந்து கொள்ள முடியும் என்று அவர் கூறுகிறார்.

### தமிழ் மரபுரிமை மாதம்

மேலும், " தமிழர் கலாச்சார மையம் அமைக்க, கனடா அரசு 20 மில்லியன் டாலர் ஒதுக்கியுள்ளதுடன், தமிழ் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் தெரு, வன்னி தெரு என, தெருக்களுக்கு தமிழ் பெயர்கள் வைத்துள்ளது கனடா அரசு. இது மட்டுமின்றி தமிழர்கள் வாழும் பல பகுதிகளில், அரசு மருத்துவமனைகள் மற்றும் பொது இடங்களில் தமிழில் பதாகைகளும் வைத்துள்ளது. இவற்றில் இருந்தே கனடாவில் தமிழர்களின் முக்கியத்துவம் என்னவென்று அனைவரும் புரிந்து கொள்ள முடியும். எளிதாக சொல்ல வேண்டுமென்றால், கனடா அரசை பொறுத்தவரையில், தமிழர்கள் இங்கு இன்றியமையாத சொத்துகளாக உருவெடுத்துள்ளனர்," என்கிறார், ரமணன் சந்திசேகர மூர்த்தி.

### 'தமிழர்கள் எந்த துறையில் தான் இல்லை?'

கனடாவில் தமிழர்கள் எத்தகைய வாழ்வை வாழ்கின்றனர், கனடாவில் தமிழர்கள் என்னென்ன துறைகளில் உள்ளார்கள் என, விளக்கியுள்ளார், கனடாவின் ஒன்ராறியோ நகரில் வசித்து வரும் வழக்கறிஞர் நடராஜ் சிறிராம்.

"கனடாவை பொறுத்தவரையில், 1970க்குப்பின் இலங்கை ராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் நடந்த போருக்குப்பின் தான், அதிகப்படியான இலங்கைத் தமிழர்கள் கனடாவுக்குள் குடியேறியுள்ளனர். அதன்பின், வேலைவாய்ப்பு மற்றும் கல்விக்காக, இந்திய தமிழர்கள் மற்றும் மலேசியா, சிங்கப்பூர் போன்ற பல நாடுகளில் உள்ள தமிழர்கள் இங்கு குடியேறியுள்ளனர்.

கனடாவை பொறுத்தவரையில், எந்த துறையில் தமிழர்கள் ஆளுமை பெறாமல் உள்ளார்கள் என்று தான் பார்க்க வேண்டும். ஏனெனில், தொழில், வணிகம், அரசியல், கலைத்துறை என அனைத்து துறைகளிலும், கனடாவில் தமிழர்கள் தடம் பதித்து வருகின்றனர். இங்கு தமிழ் மக்களுக்காக மட்டுமே, பிரபலமான ஐந்து முழுநேர சனல்




கள், 3 ரேடியோக்கள் உள்ளன.

தமிழர்கள் வாழும் பல பகுதிகளில், தமிழர்கள் தோசைக்கடை வைத்து கூட தொழில் செய்து வருகின்றனர் தென்னிந்திய உணவகங்களும் நடத்துகின்றனர். சில இடங்களில் அனைத்து கடைகளையும் தமிழர்கள் நடத்துவதுடன், தமிழில் பெயர் பலகைகளையும் வைத்துள்ளனர். அரசு இயந்திரத்தில் முடிவுகள் எடுக்கக் கூடிய முக்கிய பொறுப்புகளிலும், அரசுக்கு ஆலோசனை வழங்கும் நிலைகளிலும், தொழில் அதிபர்களாகவும், தொழில் முனைவோராகவும், அரசியல்வாதிகளாகவும், பலதுறை வல்லுனர்களாகவும் இங்கு வலம் வருகின்றனர்," என்கிறார் நடராஜ் சிறிராம்.

### தமிழர்கள் எப்படி வாழ்கிறார்கள்?

மேலும், தொடர்ந்த அவர், "கனடாவை பொறுத்தவரையில் இங்கு அரசு சார்பில், 1 - 12ம் வகுப்பு வரையில் கல்வி இலவசம், மருத்துவமும் இலவசம். இங்கு தனியார் பள்ளி, மருத்துவமனைகளை விரல் விட்டே எண்ணி விடலாம். ஒருவர் கனடா வந்தால், அவர் தனது மனைவி, குழந்தை மட்டுமின்றி, அப்பா, அம்மா, தாத்தா பாட்டி என, பின்னால் மற்றும் முன்னாள் இருக்கும் இரு தலைமுறையினரை கூட்டி வரலாம். இங்கு கல்வி, மருத்துவம் இலவசம் என்பதால், தமிழர்கள் பலரும் இங்கு வந்து குடியுரிமை பெற்று வாழ்ந்து வருகின்றனர்.

இங்கு வந்த பின், தமிழர்களுடன் ஒன்றாக இணைந்து பல சங்கங்களை உருவாக்கி தமிழர்களின் பண்பாடு, பாரம்பரியத்தை காத்து வருகின்றனர். மேலும், மற்ற சமூக மக்களுடன் இணைந்து சுமூகமான, அன்பான, ஆரோக்கியமான ஒரு வாழ்வை வாழ்கின்றனர். கனடா வாழ் தமிழர்கள் சங்கம், தமிழர் மருத்துவர்கள் சங்கம், இலக்கிய வட்டம் என, பலவற்றை உருவாக்கி தமிழர்களின் நலன் காத்து வருகின்றனர். ஐ.டி, நிர்வாகம் சார்ந்த பணி, Outsourcing பணி, விளையாட்டு, கலைத் துறை, ஊடகம் என எந்தத்துறை எடுத்தாலும், அவற்றில் தமிழர்கள் தடம் பதித்துள்ளனர். கனடாவின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் தமிழர்களின் பங்கு மிக முக்கியம் என்பதால் கனடாவில் வாழும் சீக்கியர் உள்ளிட்ட இதர மக்களைப் போல, தமிழர்களுக்கும் கனடா முக்கியத்துவம் கொடுக்கிறது," என்றார்.

# ரணிலை எதிர்ப்போரை வளைத்துப் போட திட்டம்!

## நிமல் லான்சா பலருடன் சந்திப்பு

கொழும்பு, செப். 25

ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டு வரும் கூட்டமைப்பு அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்துள்ளது.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவில் யாரெல்லாம் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணிலை ஆதரிப்பதில்லை என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றார்களோ அவர்களை வளைத்து போடும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது அந்தக் கூட்டமைப்பு.

கடந்த வாரம் இந்தக் கூட்டமைப்பின் ஸ்தாபகர் நிமால் லான்சாவை பாராளு மன்றில் சந்தித்து உரையாடிய மொட்டுக் கட்சி எம். பிக்கவிடமே லான்சா இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். (ஐ)

# பறிமுதலான மதுபானத்தை ஏலத்தில் விடத் தீர்மானம்!

கொழும்பு, செப். 25

சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட 18 ஆயிரத்துக்கும் அதிக மதுபான போத்தல்களை ஏலத்தில் விற்பனை செய்ய இலங்கை சுங்கம் தீர்மானித்துள்ளது.

வருடத்தின் ஆரம்பம் முதல் இந்த சட்டவிரோத மதுபான போத்தல்கள், அரசுடைமையில் இருந்தன என்று சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

சுங்க வருமான கண்காணிப்பு பிரிவால் ஏல நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதுடன், இது தொடர்பான கலந்துரையாடல்களை மதுவரி திணைக்களத்துடன் ஆரம்பித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஏலத்துக்கு விடப்படவுள்ள சட்டவிரோத மதுபான போத்தல்கள், நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவால் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டதாகவும் சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கொட மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# 12 வயது சிறுமி துஷ்பிரயோகம் 14 வயது சிறுவன் கைதானார்!

கொழும்பு, செப். 25

12 வயது சிறுமியை துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் 14 வயது சிறுவன் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இருவரும் குருநாகல் - குருந்துவத்தை - பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

துஷ்பிரயோகத்துக்கு இலக்கான சிறுமி, ஏற்கனவே தனது தந்தையால் துஷ்பிரயோகத்துக்கு உட்பட்டவர். இது தொடர்பில் சிறுமியின் தந்தை கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையிலேயே 14 வயது சிறுவனால் சிறுமி துஷ்பிரயோகத்துக்கு இலக்கானார் என்று கூறப்படுகின்றது. (ஐ)

# பண்ணையாளர்கள் போராட்டம் இந்து குருமார் ஒன்றியம் ஆதரவு!

மட்டக்களப்பு, செப். 25

பண்ணையாளர்கள் முன்னெடுத்துவரும் போராட்டம் தொடர்பில் ஜனாதிபதி உரிய கவனம் செலுத்தி அவர்களுக்கான தீர்வை வழங்கமுன்வர வேண்டும் என கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரியமாதவணை, மயிலத்தமடு பண்ணையாளர்கள் தங்களின் மேய்ச்சல் தரைகளை மீட்டுத்தர கோரி பத்தாவது நாளாகவும் சுழற்சி முறையிலான கவனவீர்ப்பு பேராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில் கிழக்கிலங்கை இந்துக் குருமார் ஒன்றிய உறுப்பினர்கள், சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாவட்டத்தில் உள்ள பால் வளத்தக் கொண்டு நாட்டின் பொருளாதாரத்தை வளப்படுத்தமுடியாத அரசியல் தலைமைகள் சர்வதேச நாணய நிதியத்திடம் கையேந்தும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்போதே அவர்களுக்கான கடனை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் உடன்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பதாக சிவில்சமூக செயல்பாட்டாளர் எஸ். சிவயோகநாதன் கோரிக்கை விடுத்தார். (ஐ)

# சட்டவிரோத மீன்பிடி மூதூரில் ஐவர் கைது!

திருகோணமலை, செப். 25

திருகோணமலை மூதூர் பிரதேச கடல் எல்லைக்குள் சட்டவிரோத வலைகளை பயன்படுத்தி மீன்பிடித்தமை, கடற்படையை கடமையை செய்யவிடாது செயல்பட்டமை ஆகிய குற்றங்களுடன் தொடர்புடைய ஐவரை நேற்று கடற்படையினர் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பாவித்த படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டு துறைமுகப் பொலிஸார் வசம் ஒப்படைக்கப்பட்டதாக துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்கள் 30 தொடக்கம் 40 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் கைதானவர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)




